1492 l No.— M2492.

உ
சிவமயம்.
தேவி துணை.

KALANIDHI.

A high class Tamil Monthly Journal.

கலாநிதி.

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

தாய்	சுக்கில-ஸு கார்த்திகை-மீ	சேய்
1	1929-ஸு நவம்பர்-மீ	8

உள்ளடக்கம். பக்கம்

1. தோத்திரப்பாக்கள் 1
2. கலாநிதியின் வளர்ச்சி 3
3. ஞானநலப் பகுதி 6
4. இலக்கியப் பகுதி 9
5. மதிப்புரை 13
6. பலசரக்கு 14
7. சிறுவர்களுக்கான கதைப்பகுதி 16
8. உபாத்தியாயரின் இலக்கணம் 19
9. ஒரு பிரபுவின் சரமகவி 23
10. சாஸ்வத சந்தா நேயர்கள் 25
11. கலாநிதிச் சேவகன் 26
12. மதனுபிஷேகம் (நாவல்) 27
13. தேவி பாகவதம் 55

14 MAR 1930

பத்திராதிபர் & பத்திராசிரியர் :—
இராம. வயித்தியநாத சர்மா,
தேத்தாகுடி வடக்குச்சேத்தி P. O.,
Via வேதாரணியம்.

10th March 1930.

Edward Press—Tiruvarur.

உ

சிவமயம்.

தேவி துணை.

கலாநிதி.

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

பத்திராசிரியர் :— இராம. வயித்தியநாத சர்மா.

தாய்	சுக்கில-ஸு கார்த்திகை-மீ	சேய்
1	1929-ஸு நவம்பர்-மீ	8

விநாயகர் துதி.

கலாநிதியாம் பத்திரிகை காசினியிற் காண்போர்
கலாநிதியாய் நாளுங் களிக்கக் — கலாநிதியாஞ்
சத்தியருள் பெற்றமதத் தந்திமுகத் தெந்தைபதம்
பத்திசெயச் சித்திமிகும் பார்.

தேவி துதி.

அலைகட லுடுத்ததரை மீதி லெனை யம்மையே
அவதரிக்கச் செய்த நீ
அவனியிலெ னங்கம்விட் டாவிபிரி யளவும்யா
னவதியே யடையா மலுங்
சலைபல வுணர்ந்துமிக் காசினியில் யானுமெக்
. காலமு முனைக்க ருதவுங்
கவலையடை யாமலும் பிணிகளணு காமலுங்
கருணையுள னாகவும் பொய்க்
கொலைகளவு சூதுகட் குடியெனப் புகலுமிக்
கொடிய தொழில் செய்யாமலுங்
குணவா னெனப் பெயர் தரித்திடவு மிடியெனைக்
கொள்ளாம லுங்கருணைசெய்
விலைமிகவு மடையுமணி குலவுகட லருகில்புகழ்
மேவியுறை யணிநகர மாம்
வேதவன நாதனுறை சூதவன மீதிலுள
வேதவன துர்க்கை யுமையே.

முருகன் துதி.

காசிவிசு வேசர்பிர காசமது றுங்கயை
கதாதர யோத்தி ராமர்
காணும்ப்ர யாகைஸ்ரீ வேணிமா தவர்தார
காதார கேஸ்வரர் நக
ரேசிலீஸ் வராரழகு வீசுகோ தாவரி
யிலங்குமர ணம்மையொ டரு
ளீயுமரு மரகதவி நாயகரை யுந்தினமு
மேத்தி வாழ் வுற்ற நகர
வாசிகளெ னப்புவியர் பேசுவணி கச்செட்டி
மார்தினம் வணங்கி வாழ்த்தி
மாபெருஞ் செல்வமொடு சீர்பெறுமொ ரானந்த
மருவுகல் கத்தா வெனுந்
தேசினுமே திகழு மேசினக ரிற்புகழ்
சிறக்கவாழ வுற்ற முருகா
தெங்காரு வனமேவு வங்காள நகரேறு
சிங்கார முருகேச னே. (4)

(திருப்புகழ் மெட்டு.)

சென்னை-600 008.

மங்காத சாயலுறு தானைகொள்ப ஞர்சுதயில்
சிங்கார மாகவிடை யேற வைர வோலையிரு
வண்காது மேறசர லோடுகொடி யாரமது —மிடறேற
வங்காள மாவளைபல் காபுகொலு சேறகர
மின்பாரு நாகர்திரு கோடிருமு ணுகுப்ரபை
மஞ்சாரு மோதிதனி லேறவொளிர் ப்லாகுமுக—மதிலேற
தொங்காத மாமுலையை மூடுதுயி லேரதுற
கண்காணெ ணுதவிடை யாரநடை யாலுமவர்
துன்பேறு பார்வையத னுலுமய லாகிகித —முறவாடு
தொந்தாகு மோர்சிறிய தானசுக மீதிலக
முந்தாம லோர்பெரிய தானவுன தோரரிய
துன்பேயி லாதசுக மேவுறவெ னுளுமரு —டருவாயே

கங்காள ராறுமுக மாகவதி லாரு மன
றங்காக ணுறுமறு மாமொறியை யியவது
கண்டேத டாகமுற வேசெயவ வாறுமொரு —வடிவான

கந்தாவி சாகருக தோகைமயில் வாக வுமை
மைந்தாசு ரேசகும ரேசபரமேசபல
கண்காணு மாறுமுக விறசூரர் கோறலுற —வடிதீர

செங்காடு மேருகழு காசலம யூரகிரி
வெண்காடு வேதவன மாடுதுறை மாமதுரை
செந்தூர்வி ராலிமலை போடுகதிர் காமமது —முறுவேலா

செங்காவி நீர்பரவு வானநதி சூழ்கரைகொள்
வங்காள மாநகரி லேறியமு காகவமர்
சிங்கார மாகுமுரு கேசவென தோர்பெரிய—பெருமாளே.

கலாநிதியின் வளர்ச்சி.

இதனால் கலாநிதிச் சந்தா நேயர்கள் அனைவரு மறிய அறிவிப்ப தியாதெனில் :—

யான் இக்கலாநிதியை ஏற்படுத்தியதின் காரணம், பத்தொன்பது வருடகாலமாகத்தேத்துமா நகரில், தேவி கிருபையினாலும், தருமப் பிரபுக்களின் பேருதவியாலும் நடந்தேறிவரும் கலாசாலை நீடூழி நிலைபெற் றிலங்குதற்கும், அம்பிகையருளால் அடியேன் இயற்றிவரும் "தேவிபாகவதம்" வெளிவரவேண்டியும், நமது அருமைத் தமிழின் பெருமைகளை உலகறியவும் கருதி ஆரம்பித்தேன்.

அவ்விதம் எனது எண்ணத்திற்குச் சற்றும் மாறுபாடின்றி, சித்திரை, வைகாசி, ஆனி ஆகிய மூன்று சஞ்சிகைகளும் சற்றேறக்குறைய காலந்தவறாது நடைபெற்று வந்தன.

ஆனல், சந்தாக்கள் மாத்திரம் ஆயிரம் வரையில் சேர்ந்திருந்ததேயொழிய, சுமார் எண்ணூறு சந்தாதார்கள் சந்தாத் தொகையை அளிக்காது இருந்தனர். அதனல் பணமுடை மிகுந்தது. வேறு யாரையுங் கண்டு முயற்சிப்பதற்கும், எனது மாதாவின் ஈமக் கடனை இயற்றிவருங் காலம் அவ்வமையமாகச் சம்பவித்ததால், கார்த்திகை பதினைந்து திகதிவரையிலும் ஆடிச்சஞ்சிகை வெளிவரத் தவக்க முற்றது.

பிறகு, என்செய்வோம், கலாநிதியைக்கொண்டு கலாசாலையைக் காப்பாற்றக்கருதியதற்கு, கலாநிதியே நாலுமாதம் வரையில் வெளிவராதிருக்குமாறு நேர்ந்ததே. இதுவும் தேவி கிருபைபோலும் என்றிருக்கும்போது ஓர் நினைவு தோன்றிற்று.

அதாவது, தேவை நகர் ஸ்ரீமாந் அதி. அ. ராம. இராமநாதஞ் செட்டியார் அவர்கள் திருச்செந்தூர் அழைத்தேகிய போது, சண்முக விலாசத்திலிருந்து, "நீ, இனி எதற்குங் கவலையுறேல், எல்லாம் எளிதில் முடிவுபெறச் செய்வான் நமது முருகன். ஆகையால் அவனையே துதிசெய்" என்று சொல்லியபடி துதிக்காதிருந்த குற்றமென நினைந்து அன்றே "திருச்செந்திற்பதிகம்" என்று பத்துச் செய்யுட்களை யியற்றலாயினன்.

பாருங்கள் நமது முருகன் கருணையை! தேவை நகர், ஸ்ரீமாந் அரு. லெ. வெ. நடராஜன் செட்டியார் அவர்கள் கோயம்புத்தூருக்கு என்னையும் அழைத்தேகக் கருதி, கார்த்திகை ஆறுந் தேதி திருச்சியில் சந்திக்குமாறு கடிதம் விடுத்தனர்.

அதைக்கண்டதும், இதுதான் முருகனருள். இனி நமது கலாநிதி களிப்புறுங் காலமெனக் கருதி, அக்கணமே பிரயாணமாகித் திருச்சியில் அம்மகானைச் சந்தித்தேன். அவ்வள்ளலும் திருச்சியிலேயே அநேகஞ் சந்தாக்களைச் சேர்த்து, பணங்களையும் வசூலித்துதவி, அச்சாபீசுக் கனுப்பச்சொல்லி, ஆடிச் சஞ்சிகையை வெளிவரச்செய்து கோயம்புத்தூருக்கு என்னையுமழைக்கச், சென்றோம்.

அங்கு தருமசொரூபியும், மேலச்சிதம்பரமென்னும் பேரூர் நடராஜப்பெருமான் ஆலயப்பணியரும் ஆகிய ஸ்ரீமாந் சோமசுந்தரஞ் செட்டியார் அவர்களைக் கண்டு, கலாநிதிக்கு வேண்டிய உதவிசெய்யுமாறு செய்வோமென் றெண்ணியிருக்க அம்மகான் அச்சமயம் சிவபதமடையலாயினர்.

நமது மிடியகலச்செய்யும் பிரபுவைக் காணவியலாமல் இவ்வாறுயிற்றே. இதுவுந் தேவியருளாமென்றுன்னி, அம்மகான் சிவபதமடைந்ததற்கு ஓர் சரமகவி இயற்றினன். அக்கவியை அநேக பிரபுக்களோடு கூடியிருந்த அன்னவரின் அருமைப் புதல்வராக விளங்கும், ஸ்ரீமாந் சாத்தப்ப செட்டியார் முன்னிலையில் இயம்பலாயினன்.

அக்கவி கேட்டதும், ஸ்ரீமாந் சாத்தப்ப செட்டியார் அவர்கள் அகமகிழ்ந்து தகுந்த சம்மானந்தந்தனர். அச்சரம கவியை இச்சஞ்சிகையில் மற்றோர் பக்கத்திற் காணலாம்.

பிறகு நமது நடராஜப் பிரபு அவர்கள் ஆங்குறும் பிரபுக்களாகிய ஸ்ரீமாந்கள் வெள்ளியங்கிரிக் கவண்டர், த. கிருஷ்ணஞ் செட்டியார் முதலானவர்களின் நேயமுறுமாறு செய்தும், அவர்கள் நம் கலாநிதிக்குவேண்டிய பொருளை யளிக்கவுஞ் செய்ததோடு, மற்றும் இருநூறு சந்தாக்கள் ஜீவிய சந்தாவாகவும், வருட சந்தாவாகவும் சேர்த்துப் பொருளீட்டித் தந்து, ஆடி, ஆவணி முதல், வரிசையாகச் சஞ்சிகைகள் வெளிவருமாறுஞ் செய்தனர்.

இப்பெரியாரின் பேருதவியாற்றான், நமது கலாநிதி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய், இனி வளரவும், இப்பொழுது வளர்ந்துகொண்டும் வருகின்றது.

இவ்வண்ணம் “கலாநிதி”யைக் காப்பாற்றிய ஸ்ரீமாந் நடராஜ வள்ளலேயாதலால், இனி இத் தேசத்துமா நகரில் விளக்கமுறவேண்டிய சகல தருமமும் அன்னவர் புகழ்கொண்டு நீடூழி வாழ்க! எல்லாம் வல்ல ஸ்ரீ தேவியின் திருவடிகளைச் சிந்திப்பாம்.

பத்திராசிரியர்.

ஞானநலப் பகுதி.

(முன் தொடர்ச்சி.)

(திருத்துறைப்பூண்டி S. குப்புசாமி அய்யர் எழுதியது).

நெஞ்சம் :—விவேகமே! நான் இன்னும் ஒன்று உன்னைக் கேட்டுக்கொள்கின்றேன். மூடனோடு சிநேகிப்பதிலும் சிநேகமில்லாதிருப்பது நன்று என்றெண்ணி என்னைக் கைவிட்டுவிடாதே! நான் உன்னைப் பலமுறையும் மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகின்றேன். ஓர்பிரபுவும் ஓர் ஏழையும் சிநேகமானார்களானால் பணக்காரன் ஏழைக்கு மிக்க திரவியத்தை அடிக்கடி கொடுத்துதவவேண்டுமேயல்லது ஏழை யென்ன உதவுவான்; வாயார வாழ்த்துவான்; அதுபோல நானும் உன்னை வாழ்த்துகின்றேன். நீயும் என்னைக் கைவிட்டுவிடாதே. நீ நீடூழிகாலம் வாழ்வாயாக.

விவேகம் :—ஒற்றுமையில்லாதார் நட்பு ஒருபொழுதும் நிலைத்திராது. நட்புக்கு ஒற்றுமைதான் காரணம். வேறொன்றும் காரணமில்லை. ஏழைக்கும் தனிகனுக்கும் நட்புண்டாகாதென்று சொல்லமுடியுமா? ஒரு சமயம் பழகிவிட்டால் பிறகு அப்பழக்கத்தை மறப்பது நன்றாகுமா? அதனால் நான் ஒருபொழுதும் உன்னைப்பிரியமாட்டேன். ' கூடிப்பிரியேல் ' என்பது அமுதவாக்கன்றோ? இன்பத்திலும் துன்பத்திலும் எந்த வேளையிலும் உன்னைப்பிரியமாட்டேன். நீ வருத்தப்பட்டால் நானும் வருந்துவேன். நீ சுகப்பட்டால் நானும் சுகப்படுவேன். ஆகையால் நான் உனக்குச் சொல்லும் புத்திமதியைக் கேளு. அதனால் நீ எல்லையற்றதாகிய பிறவிக்கடலை நீந்தலாம்.

நெஞ் :—நீ சொல்லிய தனைத்தும் உண்மையே! இனிமேல் நான் விட்டுப்பிரிந்து தனியே செல்லமாட்டேன். நீ சொல்லுகிறபடி கேட்கின்றேன். என்னை அன்போடு ஆதரிப்பாயாக. பிறர் நம்மைப் பழிக்காமல் நாம் மேன்மையடையும் வழியைக் கூறு.

விவே :—நெஞ்சே ! பரப்பிரம வடிவனாகிய சடாபாரந்தாங்கிய பார்வதீசனைத் தியானம்செய்வாயாக.

நெஞ் :—பார்வதீசனை நான் எங்ஙனம் தியானம்பண்ணுகிறது? தெளிவாய்க் கூறுவாயாக.

(உடனே விவேகம் பார்வதீசனிடத்து மிக்க அன்பினால் ஆவேசமாகப் பாடத்தொடங்கிற்று).

விவே :—நெஞ்சே ! நீ நினையாய் நிமிர்
புன்சடை நின்சடை நின்மலனை
மஞ்சாடும் மலை மங்கை மணாளனை
நெஞ்சே! நீ! நினையாய்!

நெஞ் :— நீ கூறியபடியே தியானித்தேன். வேறுபணியேதேனும் உளதோ?

விவே :—ஆமாம் உளது. முதலிலே திருவடியை அடைய வேண்டும் என்றேனே ! அதற்கு இஷ்டந்தானே.

நெஞ் :—இஷ்டமில்லாமல் என்ன? நீசொன்னபடி செய்கின்றேன். என் நன்மையைக் கோருகிற உன்சொல்லை யான் மீறுவேனோ? கரும்புதின்னக் கைக்கூலியா?

விவே :—நெஞ்சமே! திருவடியை நீ அடையும்போது முன்னர்செய்யவேண்டிய மற்றோர் பணியும் உள்ளது. அதைச் செய்வாயாக. அது என்னவோ வெனின், உன் அடிமைகளையும் உன்னோடுகூட அவரவர்களுக்கேற்ற முறையில் உமாபதியை வணங்கும்படி கட்டளையிடுவாயாக. அங்ஙனம் அவர்கள் செய்தால் அவர்களால் தேடப்பட்ட புண்ணியமும் உன்னையே வந்தடையும். ஏனென்றால் பெண்ணினுடைய சொத்துக்கு நாயகனும், சிஷ்யனுடைய சொத்துக்குக் குருவும், அடிமையினுடைய சொத்துக்கு எஜமானனுமே உரிமையுடையவர்களாதலின்.

நெஞ் :—சிலர் அஷ்டாவதானமும், சதாவதனமும் செய்கின்றார்களே! நீ சொல்வதைக்கூட அறிந்து நடந்துகொள்ளும் சக்தியற்றவனாக இருகின்றேனே! உன்னைவிடப் பெரியவன் நான் என்கிற எண்ணமும் கர்வமும் மாத்திரம் உண்டாகின்றன. நீ

கூறுவனவெல்லாம், ஆழ்ந்து கவனித்தாலன்றி விளங்குவன வல்ல. என் அடிமைகள் யார்?

விவே:—தலை, கண், காது முதலிய அவயவங்களெல்லாம் உனக்குத் தொண்டுபூண்டு நீ சொல்லும் வேலைகளையெல்லாம் செய்யவில்லையா! ஆதலின் அவைகள் உனக்கு அடிமைக ளன்றோ?

நெஞ்:—ஆமாம்; நீகூறுவது நன்கு விளங்கிற்று. அவற்றுக் குத்தக்க வேலைகள் என்னுடன்கூட விருந்துகொண்டு நீயே பணித்தருள். நானும் சேர்ந்து வேலைவாங்குகின்றேன்.

விவே:—தலையை நோக்கிக் கட்டளையிடுகின்றது.

தலையே நீ வணங்காய்—தலை
மாலை தலைக்கணிந்து
தலையாலே பலி தேருந் தலைவனைத்
தலையே நீ வணங்காய்.

(கண்களுக்குக் கூறியது.)

கண்காள் காண்மின்களோ—கடல்
நஞ்சுண்ட கண்டன்றனை
எண்டோள் வீசிநின் றாடும் பிரான் றனைக்
கண்காள் காண்மின்களோ.

(செவிகளுக்குக் கூறியது.)

செவிகாள் கேண்மின்களோ—சிவன்
எம்மிறை செம்பவள
எரிபோன் மேனிப் பிரான் றிறமெப்போதுஞ்
செவிகாள் கேண்மின்களோ

(மூக்கிற்குக் கூறியது.)

மூக்கே நீ முரலாய்—முது
காடுறை முக்கணனை
வாக்கே நோக்கிய மங்கை மணாளனை
மூக்கே நீ முரலாய்.

(வாய்க்குக் கூறியது.)

வாயே வாழ்த்து கண்டாய்—மத
யானை யுரி போர்த்துப்
பேய்வாழ் காட்டகத் தாடும்பிரான்றனை
வாயே வாழ்த்து கண்டாய்
கைகாள்! கூப்பித் தொழீர்—கடி
மாமலர் தூவி நின்று
பைவாய் பாம்பரை யார்த்த பரமனைக்
கைகாள்! கூப்பித் தொழீர்.

(தொடரும்).

இலக்கியப் பகுதி.

ஸ்ரீமத் கம்பராமாயணம்.

அநுமான் துதி.

அஞ்சிலே யொன்று பெற்றான் அஞ்சிலே யொன்றைத் தாவி
அஞ்சிலே யொன்றா றாக வாரியர்க் காக வேகி
அஞ்சிலே யொன்று பெற்ற வணங்கைக்கண் டயலா ரூரில்
அஞ்சிலே யொன்றை வைத்தா னவனம்மை யளித்துக் காப்பான்.

மகா கவியாகிய கம்பர் தம் கவிகளில் தக்க விடங்களில் சித்திரம் அமைத்துப்பாடுதல் வழக்கம். அது, வேறு எந்தக்கவியாலும் செய்யப்படாததோர் புதுமையாகும். கம்பர் ஸ்ரீராம லக்ஷ்மணர்களையும் சீதையையும் தெய்வமென்று நன்கு தம்முள்ளத்தில் ஊன்றியதுபோல அனுமானையும் இராவணயுத்தம் முடிக்கவந்த முதற்றெய்வமென்றே கருத்துக்கொண்டனர். அதனாற்றான் அனுமான் சுக்கிரீவனுடைய படைத்தலைவர் பதினெண்மருள் ஒருவனாயினும், சுக்கிரீவன் அங்கதன் போல இராமனுக்கு உதவி செய்தவர்களி லொருவனாயினும், தெய்வத் தன்மைக்குக்குறைவுவராது என்பதறிக. எங்ஙனமெனின் உலக நன்மையின்பொருட்டு தெய்வங்கள் எந்த வுருவமும் தாங்கித் துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனம் செய்வது உண்மையாதலின்

அவர்களின் பெருமைக்குக் குறைவில்லை. விஷ்ணு மச்சமாகவும், ஆமையாகவும், வராகமாகவும், சிங்கமாகவும் வடிவெடுத்ததால் அவருக்குக் குறைவுண்டோ?

" கற்றவர்க்கு நலனிறைந்த கன்னியர்க்கும் வண்மைகை
யுற்றவர்க்கும் வீரரென் றுயர்ந்தவர்க்கும் வாழ்வுடைக்
கொற்றவர்க்கு முண்மையான கோதின்ஞான சரிதராம்
கற்றவர்க்கு மொன்றுசாதி நன்மை தீமையில்லையால்."

என்றபடி மகான்களுக்கே பிறப்பினால் வரும் ஏதம் இல்லையென்றால் உலகத்தையியக்கும் முத்தொழில் கர்த்தர்களுக்குப் பிறப்பினால் வரும் ஏதம் என்னை?

அனுமானைக் கம்பர் எத்தெய்வமெனக் கொண்டாரோ வெனின், சங்கார கருத்தனாகிய வுருத்திர னென்றே கொண்டனர். இதைப் பின்வரும் செய்யுளாலும் அறிக:—

வாயுமற் றெனது கூறு மாருதி யெனலு மற்றோர்
காயுமற் கடங்க ளாகிக் காசினி யதனின் மீது
போயிடத் துணிந்தா மென்றார் புராரிமற் றியானே வாத
சேயெனப் புகன்றான் மற்றைத் திசையுளோர்க் கவதியுண்டோ.

அதாவது ஸ்ரீமந் நாராயண மூர்த்தி தாம் தசரதபுத்திரனாக வருவோமென்றபொழுது தேவர்களும் அவருக்கு யுத்தத்தில் உதவிபுரியும்பொருட்டு ஒவ்வோர் வடிவம் அடைவதாகக் கூறினர். பிரமன் முன்னரே சாம்புவானயினேன் என்றார். இந்திரன் தன்னுடைய கூறு, வாலியும் அங்கதனும் எனக் கூறினான். சூரியன் தன்னுடைய கூறு சுக்கிரீவனென்றான். அக்கினி தனது கூறு, நீலனென்று சொன்னான். பிறகு வாயு, தான் மாருதியாக வருவேன் என்றான். அப்பொழுது திரிபுரம்பொடித்த சிவபிரான் அந்த மாருதியே என்னுடைய அம்சத்தையும் பெறுவான் எனக் கூறினான் என்பது. இதில் விஷ்ணுவும் சிவனும் அபேதம் என்பது காட்டுவதற்கும், தாம் ஒருவருக்கொருவர் உதவியாகநின்று துஷ்டநிக்ரகம் புரிவதுண்மையென்பது தெரிவித்தற்கும் 'புராரி' என்னும் பதத்தை உபயோகித்தனர்போலும்.

பஞ்சபூதங்களாகிய அஞ்சிலே ஒன்றாகிய வாயுவின் குமாரன் என்பதற்கு அஞ்சிலேயொன்றுபெற்றான் என்றார். புஞ்சிகஸ்தலையென்று பெயருள்ள ஓர் அரம்பை சாபத்தால் அஞ்சனை யென்னும் வானர ஸ்திரீ வடிவத்தையடைந்து கேசரி யென்

பவனை மணந்துகொண்டாள். ஒருநாள் வாயுபகவான் இவளது நிஜ உருவத்தைக்கண்டு, கூட, அநுமான் பிறந்தனன். இன்னும் இந்த சிவபெருமான் என்பது உள்ளுறையாக உணர்த்தற் பொருட்டு சப்தகோடி மகா மந்திரங்களிற் றலைசிறந்ததும், சிவ பெருமானது வடிவமானதுமான அஞ்சிலே யொன்றுபெற்றான், அதாவது 'பஞ்சாக்கரவடிவமானான்'* எனக்கூறினர். இதுவும் தவிர, மகா பராக்கிரமசாலியாகிய இராவணனை ஐந்து ஆற்றல் கள் ஒன்றுகூடிக் கொன்றனவாம். அவையாவன:— விதிவலியும், காலவலியும், ஸ்ரீராமபிரானது புயவலியும், சீதாபிராட்டியின் கற்பு வலியும், அனுமானாகிய உருத்திரவலியும் என்க. அதனால் இராவணனைக் கொல்வதற்குக் காரணமான இந்தஐவகை வலியில் ஓர் வலிமைக்கு உரிமைபெற்றவனாதலின், அதனைக் குறிப்பாக உணர்த்தினார்.

'அஞ்சிலொன்றைத் தாவுதலாவது' கடலைத்தாவி என் பது பொருள். இது அனுமானது மிக்க பராக்கிரமங்களி லொன்றைக்கூறி, இதுபோல் இன்னும் பல அற்புதங்களும் செய்யவல்ல தெய்வத்தன்மை வாய்ந்தவன் என்பதை யுணர்த்து கிறார்.

சீதையை 'அஞ்சிலே யொன்று பெற்ற அணங்கு' என்றார். அது மேலே கூறிய இராவணனைக் கொன்ற ஐவகை வலியில் ஒன்றற் குரியவளென்பதற்கும், பூமிதேவியின் மகள் என்ப தற்கும் என்க. 'அயலாரூர்' என்றது இலங்காபுரி. அஞ்சி லொன்றை வைத்தது இலங்கையை எரியூட்டியது. 'அவனம்மை யளித்துக்காப்பான்' என்றதனால், அவன் தனக்குரிய சங்காரத் தொழிலோடு, சிருட்டித் தொழிலையும் காத்தற்றொழிலையும் செய்பவன் என்க. இதனால் ஒருவனே முத்தொழிற் கர்த்தாக் களாகப் பரிணமித்தான் என்பதும், அவர்கள் பேதாபேதம் என் பதும், அதனால் இராமபிரானும், சிவபெருமானும், அனுமானும், திரிமூர்த்திகளும் நிர்க்குண வடிவமான பிரமமே என்பதும், அதுவே உலக முதல் என்பதும் உணரலாம்.

* "அஞ்சாவது அஞ்சு அக்ஷரம் அல்லது பஞ்சாக்ஷரம். ஒன்று பெறுதல் அதில் பொருந்தியிருத்தல் என்வே பஞ்சாக்ஷரமே தனது சொரூபமானான்" என்பதாம்.

இதன் கருத்தைப் பின்வரும் கிஷ்கிந்தா காண்டச் செய்யுளாலும் உணரத்தக்கது.

"மாற்றமஃ துறைத்த லோடும் வரிசிலைக் குரிசின் மைந்தன்
தேற்றமுற் றிவனி னூங்குச் செவ்வியோ ரின்மை தேறி
யாற்றலு நிறைவுங் கல்வி யமைதியு மறிவு மென்னும்
வேற்றுமை யிவனோ டில்லை யாமென விளம்ப லுற்றான்."

இது இராமபிரான் அநுமானை நற்குணமுடையவனென்று தெளிந்து இலக்குமணனுக்குக் கூறியது. இதில் 'ஆற்றலும் நிறைவும் கல்வியமைதியும் அறிவும் என்னும் வேற்றுமை இவனோடில்லை' எனவே, இவனே பராக்கிரமம், இவனே சற்குண பூர்த்தி, இவனே கல்வியமைதி, இவனே ஞானம்என்று பொருள் படுவதோடு, ஆற்றலும் நிறைவும் கல்வியமைதியும் அறிவும் என்னும் இவனோடு யாம் வேற்றுமையில்லையென விளம்ப லுற்றான்.* அதாவது இவனாகிய சிவனும், யாமாகிய விஷ்ணுவும் பேதாபேதமாதலின், 'வேற்றுமையில்லையென்றான்' என்றும், ஆம் எனவே கம்பர் தம் மனக்கிடக்கையைத் தெரிவிக்கின்றார்.

இச்செய்யுளில் அநுமான் செய்த முக்கியமான செய்கைகளைச் சுருக்கமாய் அழகுபெறக் கூறியிருக்கின்றார். இங்கு கூறிய பராக்கிரமச் செயல்களாவன:—சூரியனைக் கனியெனப் பற்றச்சென்றது, எவருந் தாண்டமுடியாத கடலைத்தாவியது, இராமபிரான்றன் வருத்தங்கண்டு சகியாமையாற் சென்று இலங்கையிற் பிராட்டியைக் கண்ணுற்றது, இராவணனது அசோகவனத்தை அழித்து பிரமாஸ்திரத்துக்குக் கட்டுப்பட்டு இலங்கையை எரியூட்டியது ஆகிய இவைகளே.

1. இளமையிற் பராக்கிரமம்:—பிறந்தவுடனே அஞ்சனையை ஆகாரம் கேட்க, அவள் கனிகளே ஆகாரம் என்றனள். ஆதலின் சூரியனைக் கனியென நினைத்துப் பற்றச்சென்று, அவனைப்பற்றவந்த இராகுவையும் பற்றச்செல்ல, இந்திரன் வச்சிராயுதத்தால் அடிக்கப்பெற் றிறந்தான். வாயு தம்பிக்க, தேவர்களெல்லாரும் வந்து மாருதியை உயிர் பெற்றெழச்செய்து வரமும் ஈந்தனர்.

---

* 'வேற்றுமை இவனோடு இல்லையாம்' அதாவது யாம் இவனோடு வேற்றுமைப்பட்டவன் அன்று. அபேதமானவன் என்பதாம்.

2. கடலுருவியது அரிய பராக்கிரமத்தைக் குறிக்கிறது.

3. இராமனுக்காக ஏகியது ஆண்டவனிடத்துள்ள அன்பைக் காட்டுகின்றது.

4. சானகியைக் கண்டுபிடித்தது சாமர்த்தியத்தையும் அறிவினுட்பத்தையும் குறிக்கின்றது.

5. அசோகவனமழித்ததும், இலங்கை எரியூட்டியதும் பராக்கிரமத்தைக் குறிக்கிறது. எதுவுஞ்செய்ய வல்லமையையும் குறிக்கும்.

இச்செய்யுளில் 'அஞ்சிலொன்று' என்ற தொடர், பல முறையும் வந்து, பொருளை யூகித்துணரும்படி வைத்திருத்தவின் ஓர் விடுகவி போன்றிருத்தலான் இதனை விடுகவிச்செய்யுள் என்று கூறலாம்.

இங்ஙனம்,

S. KUPPUSAMY AIYER,

Teacher, Board High School, Tiruturaipundi.

மதிப்புரை.

இஃது "சிவபிரான் துதி" என்னும் பெயர் பூண்ட ஒரு இனிய நூல், திருத்துருப்பூண்டி போர்டு ஹைஸ்கூல், தலைமைத் தமிழ்ப் பண்டிதர் திருவாளர் M. இராமைய முதலியார் அவர்களால் நமது பார்வைக்கு அனுப்பப் பெற்றும்.

அந்நூல், பக்தியூட்டுவிக்கும் நூறு வெண்பாக்களாற் றிகழ்வதன்னியில், ஆறுமுகன் துதியும், ஸ்ரீ ராஜராஜேஸ்வர பதிகமுஞ் சேர்க்கப்பட்டுளது. இத்துதிகளின் சொல் நயம் பொருள் நயம் பெரும்புலவர்களால் பெரிதும் பாராட்டற்பாலது. சிவபிரான் துதியில், ஒன்று முதல் பத்து வெண்பாக்கள் வரையில் சிலேடையாகக் கூறியிருக்கின்றது. இச்சிலேடை வெண்பாக்

களுக்கு. புத்தகத்தின் இறுதியில், தெளிவான குறிப்புரையும் வரைந்திருக்கின்றது. இந்நூற்கு ஸ்ரீமாந் N. R. சுப்பிரமணிய அய்யர் B. A., L. T. அவர்களால் முகவுரை எழுதியிருப்பதும் தற்காலத்திற்கு மிகவும் பயனளிப்பதாயிருக்கின்றது.

"வீரராகவ கவி" எனப் புகழ்கொண்ட, ராதாபுரம் பிர்ம்ம ஸ்ரீ திரு. இராகவாச்சாரி அவர்கள் இந்நூலின் ஆசிரியர். பிராமண வைஷ்ணவப் புலவர்களில், சிவபிரான் துதி தனியே கூறித்துதித்ததில், இக்கவி வல்லாரே முதன்மை பெற்றவரெனக் கூறலாம். ஒவ்வொரு செய்யுளையும், பெரிதும் இனிக்கத்தக்க அரிய கருத்துக்களுடனும், சிவபுராணக் கதைகளுடனும் எளிதில் விளங்க இக்கவிவலா ரியற்றியிருப்பதால், சைவ மதத்தினர் யாவரும் இந்நூலாசிரியருக்கு நன்றிகூறக் கடமையுள்ளவர்களாவார்கள். இந்நூலி னருமைகண்டு அச்சிட்ட முதலியார் அவர்கட்கு நமது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகின்றோம். இந்நூல் எல்லாச் சைவர்களிடத்தும், ஏனைய கற்றோர்களிடத்தும் ஒவ்வொன்று இருக்கவேண்டிய தவசியம். இந்நூலின் விலை மூன்றே அணாதான். அன்பர்கள் உடனே மேற்கண்ட விலாசத்திற்கு எழுதித் தருவித்துப் பரவச்செய்வார்களென்று நம்புகிறேன். பத்திராசிரியர்.

பலசரக்கு.

பெண்ணாக மாறிய ஆண்பிள்ளை.

"புத்தூரிலிருந்து டிப்டி தாசில்தார் ஒருவர் அடியிற்கண்ட விபரங்களைத் தெரிவிக்கிறார்." அவையாவன :—

அந்தக் கிராமத்தில் இடுப்புவரை வேஷ்டியும், மேலுக்கு ரவிக்கையும், மாருக்குத்துணியும் அணிந்திருந்த 26–27 வயதுள்ள ஒருவனை ஷை அதிகாரி பார்த்து விசாரித்ததில், 25 வயது வரையில் தான் ஆணாகவிருந்து பிறகு நாளடைவில் ஆண்குறி மறைந்துகொண்டேவந்து பின் பெண்குறி தோன்றி பெண்ணாகிவிட்டதாயும், அப்பால் கர்ப்பமாயிருந்து கர்ப்பமும்

கலந்துபோய்விட்டதாகவும் சொன்னனும். அவ்வூர் வயோதிகர்களும், அவ்விதம் நடந்தது வாஸ்தவமென்று சொன்னர்களாம். அந்தப் பெண் அதுமுதல் மாதவிடாயாகியும் வருகிருளாம். இவ்வதிசயம் எந்த யுகத்திலும், எவ்விடத்தும் இதுவரையில் நடந்ததாகத் தெரியவில்லை. ஒரு சர்க்கார் அதிகாரி எழுதியிருப்பதால் இது கலிகால அபூர்வமென்று நிச்சயமாய்ச் சொல்லலாம் என்று "நவ இந்தியா" பத்திரிகை கூறுகின்றது.

இது உண்மையானல், இனி விவாகம் நடத்துவதற்கே, அநேக ஐயங்கள் உண்டாகு மல்லவா?

*
* *

விவாக வயதுச் சட்டம்.

இந்தச் சட்டத்தினல் பதினன்கு வயது பூர்த்தியாகாத பெண்ணுக்கும், பதினெட்டு வயது பூர்த்தியாகாத ஆணுக்கும், யாராவது விவாகம் செய்துவைத்தால், அந்த விவாகத்தில் சம்பந்தப்பட்ட பெண்ணின் பெற்ருேர், பிள்ளையின் பெற்ருேர், புரோகிதர், பெண் அல்லது பிள்ளையின் கார்டியன் முதலியவர்கள் சரீர தண்டனைக்குட்படுவதுடன், ஆயிரம் ரூபாய் வரையில் அபராதமும் விதிக்கப்படுவதற் குள்ளாவார்கள். இதுவன்றியும், இருபத்தொரு வயதிற்குட்பட்டபுருஷன் பதினன்கு வயதுக்குட்பட்ட பெண்ணை விவாகஞ்செய்துகொண்டால், அப்படி விவாகஞ்செய்துகொண்ட மாப்பிள்ளைக்கு ஆயிரம் ரூபாய் வரையில் அபராதம் விதிக்கப்படும். மேற்கண்ட விவாகங்களில் சம்பந்தப்பட்ட மற்றவர்களும் மேலே சொல்லப்பட்ட தண்டனைக்குட்படுவார்கள்.

*
* *

ரெயில் வசதி.

எத்தனையோ பத்திரிகைகள் நாள்தவருமல் ஓலமிட்டும் ரெயில் வசதிகள் சரியான நிலைக்கு வரவில்லை. வண்டி வருவதற்கு பதினைந்து நிமிஷம் முன்னல்தான் அநேக ஸ்டேஷன்களில் டிக்கெட் கொடுக்க ஆரம்பிக்கின்ருர்கள். இதனுற்படுங் கஷ்டம் கொஞ்சமல்ல. சில புக்கிங் ஆபீசர்கள், கேட்டவூருக்கு டிக்கெட்கொடுக்காமல் முரட்டுத்தனஞ் செய்கின்றனர். இதனல் பிரயாணஞ் செய்வோருக்கு கஷ்டமும், நஷ்டமும் உண்டாகின்றது. இது செய்தி ரெயில்வே அதிகாரிகள் கவனிப்பார்களா?

சிறுவர்களுக்கான கதைப் பகுதி.

வாலகில்லியர்கள்.

தேவத்திற்சிறந்தவரான காசிபர் ஒருநாள், தமது புத்திரனை தேவேந்திரனையும், சிஷ்யர்களையும், வாலகில்லிய முனிவர்களையும், இன்னும் வேறு சிலரையும், ஒரு வேள்விசெய்ய உத்தேசித்து, மாவிலையும், தருப்பையும், சமித்தும், சேகரித்து வரும்படி யேவினர். அவ்வண்ணமே அவர்கள் எல்லோரும், அவைகளைக் கொணரும்பொருட்டு வனத்தை நோக்கிச் சென்றார்கள்.

அப்பொழுது தேவர்களுக்கெல்லாம் தலைவனான தேவேந்திரன், மகா பலசாலியும், கம்பீரமான தோற்றமுடையவனுமாதலால், காட்டிற்குள் விரைந்து சென்று யாகத்திற்கு வேண்டிய சமித்து முதலானவைகளைக் கட்டுக் கட்டாய், ஏராளமாகச் சேகரித்துக்கொண்டு திரும்பினான். காசிபராகிய தனது தந்தையாருடைய ஆச்சிரமத்தை நோக்கித் திரும்பிவரும் வழியில், இந்திரன் வாலகில்லிய முனிவர்களைக் கண்டான். அவர்கள் மிகச்சிறிய உருவமுடையவர்கள். உயரத்தில் கட்டைவிரல் அளவுகூட இருக்கமாட்டார்கள். மிளகிலும் சிறிய தலையும், துரும்பிலும் சிறிய கைகால்களும், அதற்கேற்ற பிற அவயவங்களும் உடையவர்கள். அவர்கள் பலர் ஒன்றுகூடியிருந்தாலும், எறும்புக்கூட்டங்கள் போல இருப்பதால், கவனித்துப்பார்த்தால்தான் அறியலாகும். இவர்கள் எப்பொழுதும் யோகாப்பியாசமும் தவமும், செய்பவர்களாதலால் பட்டினி முதலியவற்றால் உடம்பு மெலிந்திருந்தார்கள். இவர்களில் அநேகர் சேர்ந்து ஒரு சிறு மாவிலையைத் தூக்கமுடியாமல் திண்டுமுண்டாடித் தத்தளித்துக் கீழே விழுந்து புரண்டார்கள். வேறு சிலர் ஒரேயொரு பலாசஞ்சுள்ளியை முக்கிமுக்கித் தூக்கமாட்டால் தூக்கி,

அதன் பளுவினால் முதுகுவளைந்து, மூட்டிபோட்டுக் குப்புற வீழ்ந்தனர். இன்னுஞ் சிலர் ஆடுமாடுகளின் குளம்புகள் அழுந்திய பள்ளங்களில் தேங்கியுள்ள தண்ணீரில் அதிக ஆழத்தில் சிக்கி நிலைக்காமல் கஷ்டப்பட்டு நீந்தி நீந்திக் கை சோர்ந்து கலங்கினார்கள்.

அவர்களைக் கண்ட இந்திரன் அடக்கமுடியாத நகைப்பு எய்தினான். கல்வியறிவினாலும் தவத்தினாலும் அவர்கள் சிறந்தவர்கள் என்பது அவனுக்கு நன்றாய்த் தெரியும். பெரியோர்களை அவமதிக்கக்கூடாதென்பது தெரிந்திருந்தும், தேவேந்திரன் தன் செல்வச்செருக்கினால் அவர்களைப் பரிகாசமாக நகைத்தான். இரண்டு கைகளையும் கொட்டிக்கொண்டு, "முனிவர்களே! சலக்கிரீடை பண்ணுகிறீர்களோ!" என்று கேட்டான். பிறகு சற்றும் அவர்களை மதியாமல் அதிவேகமாக அவர்களைத் தாண்டிக்கொண்டு காசிபர் ஆச்சிரமத்துக்குச் சென்றான்.

இந்திரன் இவ்வாறு தன் தந்தையாருடைய ஆச்சிரமத்துக்கு வருமுன்னரே, அவனுடைய பரிகாசத்தைத் தாங்காத வாலகில்லியர்களுக்கு மிகுந்த கோபமாயிற்று. அவன் மிகுந்த செல்வச்செருக்கை அடைந்திருக்கிறான். அவனுக்குத் தகுந்த தண்டனை விதிக்கவேண்டும் என்று எண்ணினார்கள். அதனால் அவர்கள் உடனே ஓர் வசதியையடைந்து, அக்கினியை வளர்த்து அதில் ஒரு ஓமஞ்செய்தார்கள். எங்களுடைய தபோபலத்தினால் இந்த ஓமத்தின் பலனாக வேறோர் இந்திரன் உண்டாகட்டும். அவன் இப்பொழுதுள்ள இந்திரனைக் காட்டிலும் நூறு மடங்கு அதிகமான பலமும் அழகும் உடையவனாக இருக்கட்டும் என்று சங்கற்பித்துக்கொண்டு அக்கினியை வேண்டினர்.

இதையறிந்த இந்திரன் மிரம்பவும் பயந்து காசிபரிடம் ஓடினான். நடந்த வரலாறுகளைக் கூறித் தன்னை இரக்ஷிக்கும்படி வேண்டினான். உடனே காசிபர் இந்திரன் வேண்டுகோளுக்கு இரங்கி, வாலகில்லியர்களிடம் வந்து அவர்கள் யாகஞ் செய்துகொண்டிருப்பதைக் கண்டார். அப்பொழுது காசிபர் அவர்களை நோக்கி, ஓ! புங்கவர்களே! நீங்கள் யாது பலனைக்குறித்து இந்த வேள்வியைச் செய்கிறீர்கள் என்று கேட்டார்.

அதற்கு வாலகில்லியர்கள், முனி புங்கவரே! செல்வச் செருக்கால் தேவேந்திரன் எங்களை அவமதித்தான். திரவிய பலத்திலும் தபோபலம் எத்தனையோ மடங்கு சிறந்ததென்று அறிந்திருந்தும், எங்களை நகையாடி இகழ்ந்தான். அதனால் அவன் மதத்தை அடக்குவதற்குத் தக்க மற்றோர் இந்திரன், நூறு மடங்கு பலமும் பேரழகும் உடையவனாய், நினைத்த உருவம் எடுக்குஞ் சக்தியும், நினைத்த இடங்களுக்குச் செல்லும் சக்தியும் வாய்ந்தவனாய், எல்லாரும் கொண்டாடும்வண்ணம் உண்டாகவேண்டும் என்று இந்த யாகத்தைச் செய்கிறோம் என்றார்கள்.

அப்பொழுது காசிபர், மகான்களே! நீங்கள் பொறுத்துக் கொண்டு இந்த யாகத்தை நிறுத்துங்கள். என்னை யுத்தேசித்து நீங்கள் அவனை மன்னிக்கவேண்டும் என்று வேண்டினார். அப்போழ்து வாலகில்லியர்கள் அவர் வேண்டுகோளுக்கு இணங்கி, முனிபுங்கவரே! தங்களிஷ்டப்படி யாது செய்ய வேண்டுமோ அதைச் செய்யுங்கள். நாங்கள் செய்த இந்த யாகம் வீண்போகமாட்டாது. இதைத் தங்களிடமே ஒப்புவித்துவிடுகிறோம் என்றார்கள்.

ஆகையால் காசிபர் அதை ஒப்புக்கொண்டு, இதிலிருந்து இரண்டு சிரேஷ்டர்கள் உண்டாகட்டும். ஒருவன் பக்ஷிகளுக்கு இந்திரனாகட்டும். அவனால் இந்திரனும் ஜெயிக்கப்படட்டும். என்று கூறினார். உடனே தன்னுடைய மனைவியாகிய வினதையை விளித்து, அந்த யாகத்தின் பலனையடையுமாறு அனுக்கிரகித்தார். இதனால் தேவேந்திரனுக்கு அச்சம் நீங்கிச் சந்தோஷம் உண்டாயிற்று.

"பெரியோரைப் பிழையேல்."

"சிறியோரெல்லாம் சிறியரும் அல்லர்."

"உருவுகண்டு எள்ளாமை வேண்டும்."

உபாத்தியாயரின் இலக்கணம்.

(முன் தொடர்ச்சி.)

(P. சின்னப்பன், தேத்தாகுடி.)

'A teacher must know something in every thing, and every thing in a particular thing.' என்றபடி பற்பல சாஸ்திரங்களிலும் கொஞ்சமாவது பழகியிருக்கவேண்டும், ஒரு சாஸ்திரத்திலாவது அதைப்பற்றிய சகல விஷயங்களையும் ஓதியுணர்ந்தவராயிருத்தல்வேண்டும்.

'ஓதாமலொருநாளும் இருக்கவேண்டாம்.'
'பாடை எறினும் எடது கைவிடேல்.'

என்ற முதுமொழிகளைக் கவனித்து சதா படிப்பவர்களாயிருக்க வேண்டும். அவ்விதம் விஷயங்களை உணர்ந்திருந்தால்தான், பையன்கள் கேட்கும் எவ்விதக் கேள்விகளுக்கும் சமாதானம் கூறமுடியும். இல்லையேல், அவர்கள் கேட்கும் கேள்விகளுக்குத் தக்க பதிலிறுத்த முடியாமல், அவர்களைத் தண்டிக்கவும், அதனால் அவர்களுக்குக் கற்பிப்போரிடத்தில் ஒருவித அருவருப்பும் உண்டாகக்கூடும்.

நூற்பொருள்களை மாணாக்கர் எளிதில் உணரும்படி தொடுத்துச் சொல்லுகின்ற சொல்வன்மை அதாவது போதனா சக்தி, உபாத்தியாயர்களுக்கு மிகவும் முக்கியமாய் இருத்தல் வேண்டும். மாணவர்களின் மனதை அறிந்து, அவர்களுக்கு எவ்வண்ணம் போதித்தால், விஷயங்களை எளிதில் உணர்வார்கள், எவ்விதத்தில் போதித்தால் விஷயங்களை உணரமாட்டார்களென்பதை நன்கு தெரிந்துகொண்டு அவர்களுக்கு மிகச் சுலபமாகப் புரியக்கூடிய முறையைக் கையாண்டு போதிக்கவேணடும். ஒரு மனிதன் எவ்வளவு படித்திருந்தும், இடம்நோக்கி உபயோகப்படுத்தவும், உபயோகிக்கவேண்டியதை எடுத்துச் சொல்லக்கூடிய வன்மையும் அமைவது அரிதினும் அரிதாம்.

அஃதுண்டேல், பொன்மலர் நாற்றமுடையதை ஒக்கும். ஆதலின் உபாத்தியாயர்களுக்குப் போதனு சக்தி அவசியத்திலும் அவசிய மாகும். உபாத்திபாயர்கள், நிலம், மலை, நிறைகோல், மலர், இவற்றின் தன்மை பொருந்தியவராயிருக்கவேண்டும். நிலத் தின் தன்மையாவது,

"தெரிவரும் பெருமையும் திண்மையும் பொறையும்
பருவமுயற்சி யளவிற் பயத்தலும்
மருவிய நன்னில மாண்பாகும்மே."

என்றபடி, ஓரிடத்தில்நின்று முழுவதும் காணுதற்கரிய உருவப் பரப்பின் பெருமையும், பெரிய பாரஞ்செய்து தன்மேல் நெருங் கியுவைகளாற் கலங்காத வலிமையும், தன்னையடுத்த மனிதர் தோண்டுதல் முதலிய குற்றங்களைச்செய்தாலும் பொறுக்கின்ற பொறுமையும், தக்க பருவத்திலே உழவர் செய்கின்ற முயற்சி யளவிற்குத் தகுதியாக அவர்களுக்குப் பயன் கொடுத்தலுமாகிய குணங்களுமாம்.

"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை."

என்று நாயனாரும் நன்கு கூறியுள்ளார். அதுபோல உபாத்தியா யர்களும், பிறரால் வகுத்தறியப்படாத கல்வியின் பெருமையும், பெரிய வாதஞ்செய்து தன்மேல் நெருங்கினவராற் கலங்காத வலிமையும், தன்னையடுத்த மாணவர்கள், இகழ்தல் முதலிய குற்றங்களைச் செய்யினும் பொறுத்துக்கொள்ளும் பொறுமை யும், மாணவர்கள் செய்யும் முயற்சியளவிற்குத்தக அவர்க்குப் பயன்தருதலும் ஆகிய குணங்களைப் பெற்றிருக்கவேண்டும். பொறுமையைப் பூஷணமாகக் கொள்ளல் அவசியமாம்.

மலையின் மாட்சியாவது,

"அளக்க லாகா வளவும் பொருளுந்
துளக்கலாகா நிலையுந் தோற்றமும்
வறப்பினும் வளந்தரும் வண்மையும் மலைக்கே."

என்றுரைத்ததுபோல அளவுசெய்தற்கரிய தன்வடிவத்தினள வும், 'பலவகைப் பொருள்களை யுடைமையும், எப்படிப்பட்ட வலிமையுடையவர்களாலும் அசைக்கப்படாத உருவத்தின் நிலை

மையும், நெடுந்தூரத்திலுள்ளாராலும் காணப்படுகின்ற உயர்ச்சியும், மழைபெய்யாமல் வறந்துபோனாலும் தன்னைச்சேர்ந்த உயிர்கட்கு நீர்வளத்தைக் கொடுக்கின்ற கொடையுமாகிய இக்குணங்களேயாம்.

அதுபோல் அளவு காணக்கூடாத கல்வியினளவும், பலவகை நூற்பொருள்களும், எப்படிப்பட்ட புலமையுடையோராலும் அசைக்கப்படாத கல்வி அறிவின் நிலைமையும், நெடுந்தூரத்திலுள்ளோராலும் அறியப்படும் உயர்ச்சியும், பொருள் வருவழி வறந்தாலும், தன்னைச் சேர்ந்த மாணாக்கர்கட்குக் கல்விப்பொருளைக் கொடுக்கும் கொடையும், ஆசிரியர்களுக்குரிய குணங்களாம்.

"ஐயந் தீரப் பொருளை உணர்த்தலும்
மெய்ந்நடு நிலையு மிகுநிறை கோற்கே."

என்றவாறு நிறுக்கப்பட்ட பொருளினளவைச் சந்தேகந் தீரக்காட்டுதலும், உண்மைபெறத் தான் இரண்டு தட்டுக்கும் நடுவே ஒரு பக்கத்தில் கோணாமல் நிற்றலும், தராசுகோலுக்குரிய குணங்களாகும். அதுபோலவே, மாணவர்களால் வினவப்பட்ட சொற்பொருளினியல்பைச் சந்தேகந்தீர அறிவித்தலும், ஒரு விஷயத்தில் இருவர் மாறுபட்டாராயின் உண்மைபெறத் தான் அவ்விருவருக்கும் நடுவாகப் பக்ஷபாதமின்றி நிற்றலும், ஆசிரியர்க்குரிய குணங்களாகும். இதனை நாயனாரும்,

"சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி."

என்று வற்புறுத்தியுள்ளார்.

"மங்கல மாகி யின்றியமை யாது
யாவரு மகிழ்ந்து மேற்கொள மெல்கிப்
பொழுதின் முகமலர் வுடையது பூவே."

என்ற நன்னூல் வாக்குப்படி, சுபகாரியங்கட்குரியதாய், தான் இல்லாமல் யாதொரு செய்கையு முடியாதாக, கண்டோரெல்லாரும் விரும்பி மேலாகத் தன்னைச் சூடிக்கொள்ள மென்மைக் குணமுடையதாய், மலருங்காலத்தில் மலர்தலுடைமையும் பூவின் குணமாம். அத்தன்மையைப்போல், சுபகாரியத்துக்கு

உரியவனுய்ச் சிறப்பிக்குந் தான் இல்லாமல் எக்காரியமும் முடியாதாகக் கண்டோரெல்லாரும் விரும்பி, மேலாகத் தன்னை வைத்துக்கொள்ள மெல்லிய குணமுடையவனுகிப் பாடஞ்சொல்லுங்காலத்து முகமலர்ச்சியுடையவனுயிருத்தல் ஆசிரியர்க்குரிய பூவையொத்த குணங்களாம். உபாத்தியாயர்கள் இன்னும் உலக அனுபவத்தை ஒட்டி நடக்கத்தெரிதல் வேண்டும். "உலகத்தோ டொட்ட வொழுகல், பலகற்றும் கல்லா ரறிவிலாதார்." என்ற நாயனர் வாக்கையும், "நாடொப்பனசெய்" 'தேசத்தோடொத்துவாழ்.' என்பவற்றை நன்கு கவனித்து நடக்கவேண்டும். ஆதலின், ஆசிரியர்கள் மேலே கூறிய எல்லாவிதக் குணங்களும் பொருந்தியிருந்தாலொழிய நல்லாசிரியர்கள் என்றழைக்கப்படார். இவைகளோடுகூட சுத்தமாய் இருக்கவும், பையன்களையும், உடை முதலியவைகளில் சுத்தமாய் இருக்கச்செய்வதும், இன்னும் வேண்டிய நற்குணங்களையும் பெற்றிருக்க வேண்டும். இனி ஆசிரியராகாதவர் யாரெண யோசிக்கின்,

"மொழிகுண மின்மையும் இழிகுண வியல்பும்
அழுக்கார வாவஞ்ச மச்ச மாடலும்
கழற்குடம் மடற்பனை பருத்திக் குண்டிகை
முடத்தெங் கொப்பென முரண்கொள் சிந்தையும்
உடையோ ரிலரா சிரியரா குதலே."

என்றபடி மாணவர்களுக்குக் கற்பிக்கவேண்டிய முறைகளை ஆராய்ந்து பாடஞ்சொல்லுங் குணமில்லாமையும், தாழ்ந்த குணமாகிய சுபாவமும் செய்கையும் மாணக்கர்கட்கு வருங் கல்வியின் மேற் கொள்ளும் பொறாமையும், செல்வத்தின்மேல் வைக்கும் அதிக ஆசையும், கேட்பவர்க்குப் பயம் உண்டாகும்படி பேசுதலும், கழற்குடத்தைப்போல், முன்னல் சொல்லவேண்டியதைப் பின்னலும் பின்னல் கற்பிக்கவேண்டியதை முன்பாகக்கற்பித்தலும், கருக்கு மட்டைகளையுடைய பனைமரத்தைப்போல், தாமே தம்மிடத்திலுள்ள பொருளைச் சொல்லப் பிறர் அறிந்துகொள்ள விடங்கொடுப்பதல்லாமல், பிறர் நெருங்கிவந்து வினவி யறிந்து கொள்ள விடங் கொடாதிருத்தலும், பருத்திக் குண்டிகையின் தன்மைபோல, தாம் படிக்கும்போது தம் உணர்வு சிறியதாக

லால் சிறிது சிறிதாகவே கற்று மாணாக்கர்களின் உணர்வு பெரிதாயினும், தாம் படித்தவாறே சிறிது சிறிதாகக் கொடுத்தலும், முடத்தெங்கின் தன்மையைப்போல் பொருள் கொடுத்தல் முதலிய பலவகைகளாலும் உபசரித்துத் தமக்கு வழிபாடு செய்யும் மாணாக்கர்க்குக் கற்பிக்காமல் அக்குணங்களைப் பெறாத பிற மாணாக்கர்களுக்கு தாம் கற்ற நூற்பொருளைத் தருதலும் ஆகிய மேலே கூறிய குணங்களேயாம். ஆகையால், ஆசிரியர்களாகத் தகாதவர்களின் குணத்தை அறவே ஒழித்து, நல்லாசிரியர்களின் இலக்ஷணங்களைக் கவனித்து அவற்றின்படி நடப்பது ஒவ்வொரு உபாத்தியாயருடைய கடமையாகும்.

(தொடரும்)

உ

சிவமயம்.

தேவி துணை.

ஸ்ரீமாந், திவான் பகதூர்

P. சோமசுந்தரஞ் செட்டியார் அவர்கள்

கோயமுத்தூரிற் சிவபதமடைந்தபோது செய்த

சரம கவி.

அறுசீராசிரிய விருத்தம்.

சிவபெருமான் றிருவருளாற் றேவைநகர் வாழ்வணிகச் சீமா னாகித்
தவவிளையாத் தங்குடியொக் கூருளவம் சாதிபனாய்ச் சன்மத் தாரும்
பவமகலச் செய்பேரூர் பரமற்சா லயமாற்றும் பணியே நாளுங்
கவ்லகமாக் கோவைநகர் காண்சோம சுந்தரவான் கதிபெற் றாயே. (க)

சொற்பொருள்காண் குறளுயர்வு சொற்றொழினா னெசவெனவே
சொல்வ தோர்ந்து, நற்பொருள்காண் வழியிதுவே நலமெனவத் தொழி
னடத்தி நானி லத்தோர்க், கிற்பொருள்காண் விதமறிவித் தெல்லோர்க்கு
நல்லனென விருந்தாய் மற்றுஞ், சிற்பொருள்காண் டகையுணரத்
திகழ்சோம சுந்தரவிண் சென்றாய் கொல்லோ, (உ)

தொழின்முறைநீ காட்டியபோற் றொல்லுலகுக் கினியுணர்த்துந் தூயர் யார்மற், றெழின்மிகுமூ திபமுன்போ லெடுப்பவர்யா ரிவ்வுலகத் தெவரும் போற்ற, வழிவிலறம் பலபுரிதற் காம்பொருளென் றுன்னுவர்யா ரவனி தேறும், வழிவழிகாட் டியவள்ளான் மாசோம சுந்தரனே வான்சென்றாயே. (௩)

தருமவுரு வேதரித்த தனவானாய்ச் சாத்தப்பன்றனையிப் பூவிற்
பெருமகிழ்வு தருமரிய பிள்ளையெனப் பெற்றாய்சீர் பேசுங் காலை
திருமருவு கோவைநகர் தேவைநகர் கல்லாய்முன் றேய மெல்லா
முருமருவடி கண்டுபுக ழுறுசோம சுந்தரவிண் ணுற்றா யென்னே. (௪)

புண்ணியவா னீயாவி புவிவிடவுன் னுடலெடுத்துப் போங்காற் கோவை
யண்ணியயா ருங்கூடி யரகரவென் றுரைபுகல வனேகர் வாழ்த்த
கண்ணியமா ருனதுதமர் கனகமழை பொழியச்சேய் கனல்கொண் டேகப்
பண்ணியமா ரப்பேரூர்ப் பதிசோம சுந்தரவிப் படிசென்றாயே. (௫)

ஆண்டறுப திற்செய்த வத்தான தருமமரு ணாசலத்தாற்
காண்டுறலா னேனிந்தக் காசினியு ளதுபோலக் கண்டி லேன்மற்
றீண்டுநடே சப்பிரபு வின்செயலா லிங்குயரோ றிதுவுங் கண்டேன்
றூண்டவகஞ் சொலலானேன் றாய்சருமன் கவிசோம சுந்தரற்கே. (௬)

சுக்கிலகார்த் திகைபத்திற் றொடர்நவமி யகமுஞ்சேர் சோமவாரந்
தக்கியவோர் சுபதினத்திற் றரணிவிடுத் தாவியுயர் சங்க ரன்றாள்
புக்குறநின் றனையினிநற் புகழ்சோம சுந்தரப்பேர் பூண்ட வள்ளால்
சக்கரையா முனதுமகன் சாத்தப்ப னுன்றருமந் தழைய வாழ்க. (௭)

சுபம் ! சுபம் !! சுபம் !!!

சுக்கில-௵
கார்த்திகை-மீ ௰௨
சோமவாரம்.

இங்ஙனம்,
இராம. வயித்தியநாதசர்ம,
அகத்தியான்பள்ளி.

சாஸ்வத சந்தா நேயர்கள்.

(முன் தொடர்ச்சி.)

19. ஸ்ரீமாந் ஆதீனகர்த்தா அவர்கள், வேளாகுரிச்சிமடம், திருவாரூர்.
20. ,, S. A. சங்கரநாராயண அய்யர் அவர்கள், மடத்துத் தெரு, கும்பகோணம்.
21. ,, A. ஜகதீசய்யர் அவர்கள், மிருதங்கவித்வான், மடத்துத் தெரு, கும்பகோணம்.
22. ,, S. A. வெங்கட்டராமய்யர் அவர்கள், டபீர் நடுத்தெரு, கும்பகோணம்.
23. ,, அதி. அ. ராம. இராமநாதன் செட்டியார் அவர்கள், தேவகோட்டை.
24. ,, T. A. வைத்தியநாதய்யர் அவர்கள், 54 கோர்குலம், மேல அய்யன் தெரு, கும்பகோணம்.
25. ,, சா. நா. சா. சொ. சாத்தப்ப செட்டியார் அவர்கள், காரைக்குடி.
26. ,, A. V. K. V. திருஞானசம்பந்த பண்டாரியார் அவர்கள், ஜமீன்தார், வேட்டவலம்.
27. ,, ஆ. ப. ராம. வெ. மாயாண்டி செட்டியார் அவர்கள், தேவகோட்டை.
28. ,, சுப. ராம, ராம. இராமன் செட்டியார் அவர்கள், நாச்சியாபுரம்.
29. ,, ராம. அரு. வெ. பெத்தாச்சி செட்டியார் அவர்கள், கொத்தமங்கலம்.
30. ,, மௌன ஸ்வாமிகள் அவர்கள், மௌனஸ்வாமிகள் மடம், திருக்குற்றாலம்.
31. ,, R. நடேசய்யர் அவர்கள், ஆய்க்காரன்புலம்.
32. ,, சா. அ. வ. கல்யாணசுந்தரம் பிள்ளை அவர்கள், வடபாதி.
33. ,, சுப. அரு. மகாதேவன் செட்டியார் அவர்கள், ஜவுளி வியாபாரம், மதுரை.
34. ,, அரு. லெ. வெ. நடராஜன் செட்டியார் அவர்கள், Banker, ராஜவீதி, கோயமுத்தூர்.
35. ,, ராவ்சாஹிப் O. N. இமிழ்சாமி அய்யர் அவர்கள், கொளரி விலாஸ், புத்தூர், திருச்சிராப்பள்ளி.
36. ,, ந. சு. சுப. சுப்பிரமணியஞ் செட்டியார் அவர்கள், தென்னூர், திருச்சி.

(தொடரும்).

கலாநிதிச் சேவகன்.

அன்பர்காள் !

நமது கலாநிதிக்கு கட்டுரை யனுப்பும் கலாவல்லர்கள், டிம்மியின் ஒருபக்கத்தில் கூட்டெழுத்து சிக்கெழுத்து ராயச எழுத்துக்களின்றி, தனித்தனி தெளிவான எழுத்தில் எழுதி யனுப்பவேண்டும். தூஷணையுள்ளதையும், விளங்காதனவைகளையும் பிரசுரிக்க வியலாது.

5 மாதச் சஞ்சிகையைப் பெற்றுக்கொண்ட பிறகு, 6-வது சஞ்சிகையை இரண்டொருவர் திருப்புகிறார்கள். காலங்கடந்து வருவதால் திருப்புகிறதாயுஞ் சொல்லுகிறார்கள். சில மாதங்களாக கலாநிதி காலங்கடந்தே வெளியாகின்றதென்பது யாவரும் அறிந்ததேதான். காலங்கடந்தாலுங்கூட அதைப் பொருட்படுத்தாது ஆயிரக்கணக்கான அன்பர்கள் ஆதரித்து வருகின்றார்கள். அங்ஙன மிருக்க, இரண்டொருவருக்குமட்டும் பொறுக்கமுடியவில்லை. அவ்விதம் இஷ்டமில்லாதவர்கள் சஞ்சிகையில் தனிப்பிரதியின் விலை நான்கணா எனக் கூறியுள்ளபடி, பெற்றுக்கொண்ட சஞ்சிகைகளுக்கு விலைகொடுத்துவிட்டுத் திருப்புவதே தண்ணியமாகும். இரண்டு ரூபாயைப் பனிரெண்டு பாகம் செய்து, ஒரு சஞ்சிகைக்கு விலையேற்படுத்துவது பத்திராதிபர் சம்மதமல்லவென்பதறியவும்.

வேதாரணியத்திற்கு ஷையூர் ஸ்கூல் மாஸ்டர் N. இலக்ஷ்மணய்யர் அவர்களை நமது 'கலாநிதி' பத்திரிகையின் ஏஜண்டாக நியமித்திருப்பதால், ஷையூர் வாசிகள் ஷையாரிடம் சந்தாப்பணத்தைக் கொடுத்து, ரசீது பெற்றுக்கொள்வதுடன், மாதந்தோறும், ஷையார் மூலமே பத்திரிகைகளும் வரப்பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகிறது.

கலாநிதிச்சேவகன்,

மதனபிஷேகம்.

அத்தியாயம்—2.

நல்லா ரிணக்கம் பெறல்.

(முன் தொடர்ச்சி.)

ஞானி :—ஆனால் வசதியிற் சேட நிறுத்தவில்லையோ ?

சுந்த :—சிற்ற மிகுதியாற் சேடமே நிறுத்தவில்லை.

ஞானி :—பலதலஞ் சென்றதாற் செலவும் பலத்திருக்கலாமே ?

சுந்த :—ஆம் அதிகச் செலவுதான். புகைவண்டிக்கும், மோட்டாருக்குங் கொடுத்ததே மிகுந்த செலவாகியது. இதுவன்றியுங் காப்பி ஹோட்டலுக் கழித்ததே மூன்றுபங் கதிகமிருக்கலாம். பாழுங் காப்பி ஹோட்டலில்லாவிடின் நம்மிந்தியாவில் தரித்திரமு மிராதென நம்புகிறேன்.

ஞானி :—கலைகடலைக் கடந்த தாங்கூடக் காப்பி ஹோட்டலிலுண்டீரோ ?

சுந்த :—என்செய்வது ? பாழும் வயிற்றுக் கீயவேண்டியிருக்கின்றதே. மேலும் அந்தணர் அனைவருந்தான் புகுந்துவிடுகிறார்களே.

ஞானி :—அந்தணரென்ன, யாவராயினுஞ் சரிதான். தன் குலாசாரத்தில் சிறிதும் வழுவாமல் நடந்துகொள்ளவேண்டுமெனவெண்ணுகிறவன் யாவனோ, அவன் ஒருக்காலத்திலுங் காப்பிஹோட்டலி லுண்ணமாட்டான். அங்குள்ள அனுசாரத்தை யியம்பிடில் வெகுநாட் செல்லும். மேல் நாட்டின் நாகரீகத்தில் நசையுற்று, அவ்வாசாரம்போல் முழுவது நடக்காமலும், தன்னு

சாரத்தையு மறந்து, வௌவாலைப்போல் ஓரினத்தி லுஞ்சேராமல் திரிபவர்கள்தான் காப்பிஹோட்டலை யடைவார்கள். நன்னெறிபுக்கிய வெவரும் நண்ணார். அஃதெவ்வாறாயினு மாகுக. தாஞ்செலவழித்தது போக மீதமுள்ள திரவிய மெவ்வளவோ?

சுந்த:—இதுவரையினும் ஐம்பதாயிரம் ரூபாயைச் செலவிட்டேன். ஆங்காங்கு சுவாமிகளுக்கு ஏராளமாக செலவழித்து தரிசனஞ்செய்ததால் செலவேறியது.

ஞானி:—ஆனதாகியது. இனி யெங்குசெல்வதாய் நிதானித்திருக்கிறீர்கள்?

சுந்த:—இனி யெங்குமேகுவதா யெண்ணமின்று. தேவரீருக்காளாயிருக்கவே யெண்ணம்.

ஞானி:—தம் வாழ்க்கைத்துணையாள்மீது கொண்ட குரோதங் குறையவில்லையோ?

சுந்த:—கலாங்கடுகளவுங் குன்றில. இனி இல்லவள் வதனங் கண்ணுறக் கருதிலன்.

ஞானி:—"இன்னமை வேண்டி னிரவெழுக விந்நிலத்து
மன்னுதல் வேண்டி னிசைநடுக— தன்னொடு
செல்வது வேண்டி னறஞ்செய்க வெல்வது
வேண்டின் வெகுளி விடல்."

என, வான்றோ ருரைத்ததைத் தாமறியாதவரன்று. யாவர்மாட்டுங் கோபமில்லாதவனுக்கு எவனும் பகையாகமாட்டானாகையால், அவன் யாவரையுஞ் சயித்தவன்போலாம். ஆதலான் எல்லாருடனும் ஜயத்தை விரும்பினானால், வெகுளியை விடல்வேண்டும். நுந்நாயகியின்பாற்கொண்ட வெறுத்தலை விடாதிருக்கின், மேனீதிமொழிப்படிக்கு அன்னவட்கு நீர் தோற்றவராகும். ஆதலானவசிய மரிப்பு நீக்குவதே தக்கனவாம். அதுவிருக்க, எவ்வாற்றானுந் தமது பாரியாண்மீது பழிசுமத்த விடனிலை. ஏனெனின், நுமது தகாவொழுக்கத்தால் நும்பாலவள் கடுங்கதங் கொளக் காலநேர்ந்தது.

"பெற்றா னதிர்ப்பிற் பிணையன்னு டானதிர்க்கும்
கற்றா னதிர்ப்பிற் பொருளதிர்க்கும்—பாரிய
மண் ணதிர்ப்பிற் மன்னவன் கோலதிர்க்கும்
பண் ணதிர்ப்பின்பாடலதிர்ந்து விடும்."

என்பனபோன்று மணந்த மணாளன் இல்லறத்திற் கேற்ற வொழுக்கத்தின்படி நடவாது தகாவழியிற் புகுவானாயின், பெண்ணரிணை நிகரு மவன் காதலியு மவன் நெறிபுக்கு அத்தீய வொழுக்கத்தினின்று மயங்குவாள். அவ்வண்ணங் கொடுவழி புகாது தம்மை யப்பாதைக்குச் செலவிடாது தடுத்த மேம் பாடடைந்த அக் கற்புளாளைப் பெரிதும் போற்றல் வேண்டும். அஃதொழித்துக் காந்தைபாற்கொண்ட கலாம் விடேனென்பது அணுவு மேற்றமொழியன்று. மேலும் பெண்களுக்கு மட்டுமே கற்புடைமையென்றும் ஆண்களுக்கவை வேண்டியதில்லையென்றும் விளம்பு வது ஓர் தீய மொழியேயாம். இது காரியம் பெரும்பாலினோருக்குத் தெரிவதேயில்லை. ஆண்மக் கள் எதுபுரியினுங் குற்றமின்றென்று அவர்க ளெண்ணம் போலும். அவ்வாறெண்ணுவது துரெண்ணமேயாம். பெண்மக்களுக்குரிய கற்பிலக் கணமெவ்வாறோ அவ்வண்ணமே ஆண்மக்களுக்குரிய கற்பிலக்கணமும். கற்புநிலை பிசகினால், பெண்களுக் குச் சேரும் பாவம் எவ்வளவோ, அவ்வளவே கற்பு நிலைதவறிய ஆண்களுக்கு மென்றறிதல் வேண்டும். நூனெறிவழுவாது இல்லறம் நடாத்து மொவ்வரு வனும், ஐவகைச் சீலத்தில் அணுவுந்தவறாது நடக்க வேண்டும். சீலமைந்தென்பது, கொல்லாமை, கள் ளுண்ணாமை, பொய்யாமை, காமமின்மை, கள்ளாமை என்பனவாகும். இவ்வைந்தி லொன்றாகிய காமமின் மையென்பது, அயல் மாதரை விரும்பாமையென்பதே யாம். பொய்யினுங் களவினு மெத்தகைய தீமையென் றஞ்சுகின்றோமோ, அவ்வாறே மறுமங்கையரை விரும்புவதாலுந் தீமையென்றஞ்சுதல் வேண்டும். வேற்று மங்கையரை விரும்பாதவன் எவனோ அவனே

இல்லறத்தானாகும். இது காரியத்தில் தக்கவனாயிருப்பவன் பாக்கி நான்கு சீலத்தையுங் கைவிடானென்பது விளம்பாமலேவிளங்கும். நாயனாரும் ஆண்கற்பை விளக்குவான் வேண்டி "பிறனில் விழையாமை" யென்றோரதிகாரமும், "வரைவின் மகளிர்" என்றோரதிகாரமும் கூறியுள்ளார். இதுவிஷயம் தாமறியாததின்று. பிறமாதரை மனத்தால் விரும்பினாலும் பகை, பாவம், அச்சம், பழியாகிய இந்நான்கும் நீங்கவே நீங்காது. அத்தகையாளன் இல்லறமும் இல்லறமாகாது. பேயினம் வாழுஞ் சுடுகாடேயாகும். கற்புநிலைவழுவிய ஆண்மக்கள் எத்தகைய நன்மைக்கும் உரியராகார். கறபுடையாரே நலத்துக் கேற்றவராவர்.

"நலக்குரியார் யாரெனினா மநீர் வைப்பிற்
பிறர்க்குரியாக டோடோ யாதார்"

என்பதால் நன்குணர்வீராக. நல்லறிவுடைய பெரியோர்கள் ஓர்காலத்திலும் கணிகையரைக் கருதார். அறிவற்ற கீழோர்கள்தான் வேசியை விரும்புவார்கள். பொய், கொலை, களவு, சூது, வேசியர் ஆகிய இவைகளை விரும்புவோரிடத்தில் இலக்குமி நாட்டமே இராது. இக்கொடியவரைக் கண்டால் பயந்து பலகாவத்தூரம் விலகிவிடுவாள். இச்செய்கையில்லாரிடத்திற்றான் திருமகளும் அன்புற்றிருப்பாள்.

"இரு மனப்பெண்டிருங் கள்ளுங் கவறுந்
திரு நீக்கப் பட்டார் தொடர்பு."

என்னும் பொய்யாமொழியின் பொருவில் வாக்கியத்தை நன்குணர்ந்து பாரும். ஆனதால் மாதர்களிடத்து மட்டுங் குற்றஞ்சுமத்தி, நங்குற்றத்தைக் கருதாது விடுவது ஞாயமன்று. தாந்தங் காதலியினிடத்து இவ்வாறு தீராக்கோபங்கொண்டிருப்பது கற்றார் செயலன்று. வெகுளியை வேரூன்றச்செய்தது மேதம். இனிக்குரோதங்குன்றா தென்பதுங் குறை. உத்தமர்களிடத்திற் செயிர்ப்பு சிறிதுகாலமுந் தங்காது.

" உத்தமர்க்குக் **கோப** மொருகணமி ரண்டோடி
மத்திமர்க்குக் **கோபம்** மருவுமே—நத்தியொரு
நாளுறு **மதர்மரிட** நன்றியிலாப் பாவியிடம்
மீளுவதி லுள்ளளவு மே."

என்பதாலு நன்குணரும். உத்தம புருஷர்களிடத்தில் சீற்ற நிற்காது. "எல்லாம்வெகுண்டார் முன்தோன்று கெடும்" என்னும், மேலார் வாக்கு நன்கு புலப்படுத்தும். கோபத்தையுடையவன் சதா காலமும் துக்கத்தையே அனுபவித்தல்வேண்டும். ஒரு காலத்திலும் நிர்மல மனதைப் பெறவேமாட்டான். மீளாச்சினத்தையுடைய வொருவன் கடவுள் செயலையுங் கவனிக்கான். பார்த்ததெல்லாங் கோபமாய்த் தோன்றப்படுவான். தன்னைத்தானே அடிக்கடி நிந்தித்துக்கொள்வான். தான்செய்வதுங் கோபமாய்த்தோன்றும். பிறர்புரிவதுங் கோபமாய்த் தோன்றும். எல்லாரிடத்துங் கோபத்தைக்காட்டி, இறுதியில் எல்லாரையும் பகைமை செய்துவிடுவான். கடையில் அனுதையாய் அருநரகிற்காளாவான். ஆதலான் தாம் அடைந்த குரோதத்தையகற்றி, இல்லாளோடு கூடி, இல்லறத்தை இயல்பாய் நடத்துவதே மேல். இதுவே யென திதோபதேசம். இவ்வண்ண மியம்பியதற் கென்பாலயிர்ப்பு கொளற்க.

சுந்த:—நன்கு புகன்றீர்கள்! தங்களிடத்தில் யான் சீற்றங் கொள்ளாவது? நீதிபுகட்டுந் தங்களிடஞ் சினந்தால் நன்றிகொன்றவனுவேன். தாங்கள் செப்பியதனைத்துந் தப்பாதுளத்திருத்தினேன். இன்னுஞ் சிலநாள் தங்களிடத்திலிருந்து பின்னர் தாமறைந்தவண்ணமில்லுக் கேகின்றேன்.

ஞானி:—சிலதினமென்ன, பலவருடங்கள் தங்கினுலுஞ் சந்தோடமே. அஃதிருக்கட்டும். தங்களிடத்து முதன் முதன் வினவியறியவேண்டியதை விடுத்து, வேறு வினு வினவி, இடையினேர்ந்த விடைவெளியால் பேச்சு மிகுந்தன.

சுந்த :—அஃதியாது ?

ஞானி :—தங்களுக்கு மக்களுளவா ?

சுந்த :—இல்லை.

ஞானி :—ஈசன், இன்னுங் கருணைபாலிக்ககவில்லைபோலும். மக்களிருந்தால் இதுபோன்று இல்லத்திற் கலகமு நேரிட்டிராது. இல்லறத்தான் பெறவேண்டியதில் முக்கியமான மக்கள் குறைவைப்பெற்றிருக்கிறீர்கள். அக்குறைபாடுஞ் சீக்கிரத்தில் நிறைவேற ஆண்டவ னைப் பிரார்த்திக்கின்றேன். நிற்க. தாங்கையிலுள்ள பொருளைச் சின்னபின்னமாகச் செலவுபுரியாது காப்பாற்றி, நால்வரோடொப்ப நல்லவனாக நசையுறுங் கள். "இவ்வளவேனு மன்னமிட்டுண்மின்" என்ற மூதாட்டியின்றிருவாக்கை மறவாது, வாழ விரும்புங் கள். தாங்களிங்கிருக்குமட்டும் என்னை விட்டகலாது அடிக்கடி நற்பேச்சுப் பேசும்வண்ணம் விரும்புகி றேன்.

சுந்த :—தங்களை விடுத்து ஏக எண்ணமடைந்திலன். தங்களுப தேசப்படி ஊர் சென்றாலுங்கூடத், திங்களுக்கிரு முறை யிங்கெனைக் காணலாம். இதுபோன்ற நல்லா ரிணக்க மில்லாமற்றான் நாயேனிவ்வாறு புல்வழியிற் புகநேரிட்டது. கற்றகேள்வியும் மங்கிற்று.

ஞானி :—வாருங்கள் வெளியிற் சென்றுலாவி வருவோம்.

இரண்டா மத்தியாயம் முற்றிற்று.

உன்னது குருவி யாழ ஞேதுறுங் காமநூலை
யென்னெணிச் செய்தான் காம மேற்றவ ரந்நூற் சொல்லு
மன்னபோ னடப்ப தற்கா வதைவிடு வதற்கா சொல்வாய்
சொன்னது விடுதற் காயின் றேன்றச்செய் ததுவீணன்றே. (சரு)

நூலது போற்கா ணுங்கா ணுவலியான் விரோதஞ் செய்த
போலவி ராதன் ஞேரின் புகழ்சொலுஞ் சீடன் யானச்
சீலனெற் குரைத்த வண்ணஞ் செய்துற லன்றோ தன்மஞ்
சாலவங் கதனை யானுஞ் சாற்றிட வேண்டு மோதான். (சசு)

ஆட்வ ரிடத்தோர் மாதன் பாயின ளேலவன் றனைக்
கூடலாம் வல்லோர்க் கெந்தக் குமரியு முரியள் வன்மைப்
பாடலார் தமக்குச் சொந்தப் பாரியு முரிய ளாகாள்
கோடலா மென்று நூல்கள் கூறவு நின்ற வன்றோ. (சஎ)

இங்குகொன் முறையிற் றுரை யென்னிடத் தன்புற் றுளாய்த்
தங்கின ளாளவ் வாசான் சாற்றிய படிவி டற்கோற்
பங்கினு மேது வில்லை பகரவில் லறத்தன் பில்லா
ளுங்கிவ ளதனுல் யான்கொண் டுற்றன னமர ரேறே. (சஅ)

உன்னிட்டப் படிசெய் வாயென் றுரையெனக் கேட்ட தூதன்
றன்னிட்ட மேதுஞ் சொல்லத்தானறி யாது போய்த்தன்
மன்னிட்ட மனைபு குந்தம் மதியுரை யிதுவே யாமற்
றென்னிட்ட மலவென் றுனு மிந்திரன் கோபங் கொண்டான்.(சகூ)

வேறு

சினமி கக்கண் சிவக்க வுயிர்ப் பிரிந்
தினமி குந்தன் னெழிற்படை யோடுபோர்க்
கெனம திக்குமு னேகின னிந்திர
னைத றிந்தா னசுரர்க டங்குரு. (ருo)

அக்க ணத்தே யடைந்து மதியிடத்
திக்க ணம்போ ரிதற்கஞ்சி டாதிரு
வெக்க டும்போ ரெதிரினு மெம்படை
புக்க ழிக்கும் புகுந்தாரை யைவிடேல். (ருக)

என்னு மப்புக ரின்மொழி தானறிந்
தின்ன லிங்குதிற் கேகாவி தஞ் செயற்
குன்னை யன்றிமற் றுண்டோ துணையெனப்
பொன்ன ரன்றனைப் போற்றி நின்றுனரோ. (ருஉ)

தேவர் தங்குரு செய்துதிக் கன்புகொண்
டாவ னுன்றுணை யாகவென் றன்றருண்
மேவ னின்றான் விமலனுங் கற்பகக்
காவ லன்போர்க் கடுகிச் சென்றனரே. (ருங)

அங்கணும் புக ராற்று முயற்சியாற்
றங்கி யாருஞ் சமர்க்குவந் துற்றனர்
பங்கி ரண்டும் பகர்தார காதிகட்
குங்கண் முன்னம ருற்றபோ லுற்றவே. (ருச)

வான வர்க்கு மதிக்குத் துணைவருந்
தான வர்க்குஞ் சமர்நெடு நாள்வரை
யான தைக்கேட் டயன்பெரும் பாவமற்
றீன மிக்க விருவர்க்கு மாய்ந்து. (ருரு)

குரும னைக்காகக் கொள்வதுண் டாசமர்
மருவி யானதை மாற்றுவ னென்றுபோர்
தருக ளத்தினிற் றானடைந் தேமதி
திருமு கங்கண்டு செப்பலுற் றானரோ. (ருசு)

மதியெ னப்பெயர் வகித்த மதியிலோய்
மதியி லுன்னை மதித்திடு வார்களார்
மதிகொ டேகுரு மாமனை தன்னைநன்
மதிபெறக் கொடு மற்றவன் றானுற (ருஎ)

இல்லை யேலரி யின்றுணை கொண்டுனை
யொல்லை நாச முறச்செய்கு வேனெனச்
சொல்லிப் பின்னுமச் சுக்கிரற் கண்டிதென்
றெல்லை நீயுமித் துன்மதி கொண்டனை. (ருஅ)

பிறர்ம னைக்குப் பிரியங்கொண் டோரில்யார்
திறமு டைந்தார்நற் சீரதுண் டாவிப்போர்
துறையி னின்மூழ்கித் துன்படைந் தாயிதிற்
குறையுன் றன்பேரிற் கூறிற் பயனென்னே. (ருகூ)

சேர்க்கை யால்வருஞ் சீர்க்கே டிதுவுனக்
கேர்க்கை யாகா தினிவிடு போரெனத்
தீர்க்க மாகத் திறந்திடத் தேயுரை
யார்க்கு மம்மொழி யாங்கறிந் தேபுகர். (கூ0)

மதியி னைக்கண்டு மற்றினி யானமர்க்
கெதிரி யாவ னெதுமுத வம்பெறே
னதிவி ரைவி லனுப்புவை தாரையைப்
பதியி டத்தென் பதியினங் கொண்டனன். (௬௧)

என்ற சொற்கேட் டெழிற் றுரையைக்குரு
வன்ற ழைத்தேக வங்கண னுப்பின
னென்று தானவ ரும்பர் தமதிடஞ்
சென்று தங்கினர் சிந்தை களிக்கவே. (௬௨)

வேறு.

மதியிடங் கருவைப் பெற்று வந்தவத் தாரை தன்னோர்
பதியிடத் தமரச் சின்னாள் பரவவோர் சுதனை யீன்று
டிதியொடு வார நட்சத் திரமொரு சுபதி னத்திற்
றுதிமிகப் பெறக்கொ ளந்த சுதர்க்குறு சாதகன்மம். (௬௩)

விதிப்படி யியற்றி வந்தான் வியாழனிச் செய்தி கேட்டு
மதிப்புறின் மகனை யன்னான் மகனெனக் கொண்டா னென்றென்
முதித்துற மதியோர் தூதை யொருகுரு முன்னின் சேயைத்
துதித்துற நகாதென் றோடிச் சொல்லென வனுப்பினானால். (௬௪)

தூதனவ் விதமே சென்று சொல்லவக் குருவப் போதிற்
றீதறக் காண்சே யென்போற் றிகழ்வதா லென்சே யென்றற்
காதர வாகு மாத லையுற விலைபோ வென்றப்
போதவன் முனஞ்சொ லப்போய்ப் புகன்றனன் மதிமுன் றூதன். (௬௫)

மற்றுமுன் போல யுத்தம் மருவவப் போதும் வேத
னுற்றவர் சமரை நீக்கி யுண்மையை யுணரத் தாரை
சொற்றிரம் பெறக்கேட் டன்னாள் சொற்படி சுதனை யீந்து
பெற்றிட வளித்தா னச்சேய் பெயர்புத னென்பார் மன்னோ. (௬௬)

பதினோராமத்தியாயம் முற்றிற்று.

(ஆக செய்யுள் ௬௨௪).

உ

சாமேஸ்வரப்ராண நட்யை நம:

பன்னிரண்டா மத்தியாயம்.

"சுத்யும் நஸ்ய ஸ்திரீத்வ ப்ராப்தி கதனம்."

பார்புகழ் சுத்யும் நப்பேர் படைத்தமன் னாதி மன்ன
னேர்புனை வடிவம் பெண்ணா யெழிற்புத னுடன்கலந்து
சீர்புரூ ரவனைப் பெற்ற சிறப்பையுஞ் சொல்லக் கேண்மின்
பேர்புகழ் தவத்தீ ரென்னப் பின்னுமச் சூதன் சொல்வான். (க)

சுத்யும்ந னென்னும் பேரோன் றொல்லற வழக டக்கான்
சத்யவான் மறைகொள் வேள்வி தானங்கள் செய்வோன் வாழ்வை
நித்யமென் றெண்ணா வீர னிலமர சாளு நாளின்
மத்யமோர் நாள்வேட் டைக்கு வனம்புக வெண்ணித் தன்னோர். (உ)

மந்திரி களிற்சில் லோரை வரும்படி யாகச் செய்து
சுந்தர மாகத் தானோர் துரகமீ தேறி முன்னர்
வந்துமா ரணியத் துற்ற மான்முயல் புலிசி றுத்தை
முந்துபன் மிருக வேட்டை முயன்றுசெய் திளைத்த பின்னர். (ங)

மேருவின் சார லின்கீழ் மிகவெழில் வாய்ந்த தாகக்
காருடன் கலந்த தெங்கு கதலிமுன் றருக்கள் சூழச்
சீருறு முல்லை யாதிச் செடிகளுந் திகழ வாச
நீருறக் கானுத் யான நேரக்கண் டதனுட் சென்றான். (ச)

சென்றது முருவம் பெண்ணாய்த் திரிந்தனன் பரியும் பெண்ணாய
நின்றிடக் கண்ட வேந்த னிகழ்தென் வியப்ப தோவென்
றன்றெது மறியா னாகி யவ்வனந் தனிலே கால
வொன்றிட விளையெ னும்பே ருற்றவ னிருந்தான் மன்னோ. (ரு)

முனிவர்கள் கேட்டுச் சூத முனிவனை நோக்கி யைய
நனிவியப் பிதுவத் யான நண்ணிய விறைவ னாங்கண்
வனிதையி னுருவ மாக மாறிடற் கேது வென்னென்
றினியதை யெமக்கு ரைப்பீ ரென்னலு மியம்ப லுற்றான். (சு)

வேறு.

முன்னொருநாட் சனகாதி முனிவர்சிவ பெருமானை
யுன்னிவிருப் புடனறிய வயாறு கொடு விரைவி
லன்னவனைத் தணுகுங்கா லானுமை யோடல்லாசத்
தின்னயமார் கிரீடைபுரிந் திலகமய மாயுளதால் (எ)

இவர்களது டற்காந்தி யெழிலுறுமவ் வனவிருளைக்
கவவதனை யீசனுடன் கலந்துளவம் பிகையறிந்து
சிவபெருமான் றனதுமடி சேர்வதுவிட் டாடைபுனைந்
தவணதிக நாணுமுற வமர்ந்தனளோ ரிடமறைவில். (௮)

சனகாதி முனிவரிது தருணமுமை சங்கரர்க
ளினமாரக் கிரீடைபுரிந் திலகினரென் றோர்ந்து பெயர்ந்
தனரேகி நரநாரா யணரதுநற் றவமாரும்
வனமேவ லுற்றனர்பின் மாதுமையைச் சங்கரரும். (௯)

கண்டுமையே நீயாது காரணமோ மன வெட்க
முண்டனைமற் றுனதிட்ட முறவிவண்கி ரீடித்தற்
கண்டுமிடை யூறெதுசொல் லதுவிலகச் செய்தின்ப
மண்டுமுனக் குண்டாகும் வணம்புரிவ னென்றுசொல. (௧௦)

அம்பிகையப் போதாரு ரடிகள்பணிந் தென்பதியே
தம்பதிக ணந்தருணஞ் சனகாதி முனிவர்சொளா
திம்பருற வவர்தேக வெழிலொளியாற் கண்டனனவ்
வும்பர்புகழ் முனிவரரை யுடனுண முற்றன ளால். (௧௧)

என்றதுமோ பெண்ணேநம் மிருவர்கிரீ டைக்குரிமை
யொன்றுமிட மிவ்வனம துணராம லெவரேனு
மின்றுமுத லிங்கடைவ ரேலவர்பெண் ணவரென
வன்றுசபித் திட்டனனே ரருஞ்சாபஞ் சங்கரனே. (௧௨)

தவமுனிகா ளிவ்வணமித் தகைசாப மேற்றுளதை
யெவருமறி யாரறிவோ ரிவ்வனத்துள் வருவதிலை
யிவணிலகு சுத்யும்ந னிதனையறி யானதனாற்
பவமிகுபெண் ணுருவானான் பரிசினிமேற் சொலக்கேண்மின். (௧௩)

பெண்ணுருவைச் சுத்யும்நன் பெற்றிளையென் றோர்நாம
மண்ணியுரை நாளந்த வாரணிய வழிபுதனு
நண்ணவிரு வருமோக நல்மாரச் சேர்ந்தனரா
வெண்ணிளைகர்ப் பங்கொடவ ணீன்றசுதன் புரூரவனும். (௧௪)

அம்மகவின் முகந்தனையங் கடிக்கடிகண் டதிகதுயர்
விம்மமனத் தேதனது வியங்குருவா கியவசிட்டர்
தம்மைநினைத் திடவறியத் தவனிளைபெண் ணுருமாற்றற்
கெம்மகதே வனைவேண்டி யிருந்தவமி யற்றினனால். (௧௫)

அருந்தவ மியற்றியவன் னவனெதிர்சங் கரனுற்றே
னிருந்தவமி யற்றுகிறு யெதுவேண்டு மெனவுடனப்
பெருந்தவனு மெழுந்துசிவ பெருமானே சத்யும்நன்
பொருந்துறுபெண் ணுருவகற்றிப் புகழ்தருமா ணுருவருள்க. (௧௬)

வேண்டுமென வேண்டிடவவ் விமலனுமிவ் வனத்திடைவந்
தீண்டிடுவ ரெவரேனு மேழையுருப் பெறுவரெனா
வாண்டுசபித் துளனாலிங் கருமுனியே யாணுருவங்
காண்டுறலு மரிதாகுங் கழறுமிடத் தவன் மீண்டும். (௧௭)

ஆகையினா லொருமாத மாணுருவு மொருமாதந்
தோகையினா ருருவுமுறத் தோன்றுவ னென் றருள்புரிய
வோகைமிக வதிட்டனடைந் துறுமமயஞ் சுத்யும்நன்
வாகைபெறு மாணுருவ மருவிடவந் தனனன்றே. (௧௮)

வந்துதன தருங்குருவாம் வதிட்டர்திரு வடிவணங்கி
யிந்தவிதம் பெண்ணுருவ மிரிந்தவகை யானறியே
னந்தவித மேதுரையென் றதுமாசா னென்றவமே
தந்ததென வரலாற்றைச் சாற்றிடக்கேட் டிதுபுரிவான். (௧௯)

ஆணுருவ மடைமாதத் தரசியன டாத்துதலு
மாணுருவம் பெண்ணுருவா மதைத்தந் தப்புரத்துங்
காணுருவிற் கேற்றபடி காலமது கழிக்கவிது
வீணுருவென் றேகுடிகள் வெறுப்படைய வுற்றதனால். (௨௦)

இந்தவிதஞ் சிலகால மேறியபின் றன்புதல்வற்
கந்தவர சாளவளித் தாரணியஞ் சென்றுமையின்
மந்திரநவாக்கரமா மநுவை முநி நாரதனை
வந்தனைசெய் துபதேச மனமகிழ்வு றப்பெற்றான். (௨௧

மனவுறுதி யோடுபல வருடமுப தேசந்தர
னினமுறவே பெற்றவுமை யினதுமநு வைச்சபிக்க
வனவனெதி ரம்பிகையோ ரரியின்மே லாகவவன்
றனதிருகை குவியவுமச் சத்தியைநேர் துதிசெய்வான். (௨௨)

வேறு.

பகவதி யுன்னரும் படிவ முன்னருண்
மிகவரு மென்னிரு விழிகள் பெற்றிடு
மகவர னாயினன் மாறி தற்கெதோ
புகவறி யேனியான் புரிதல் போற்றியே. (௨௩)

தேவரும் முனிவருந் திகழுன் னாற்பெற
லாவதா யுள† விரண் டைஸ்வர் யங்கொளத்
தூவரு முனதொரு சொருபங் காணுறார்
பூவரும் யான்பெறப் போந்த தென்றவம். (௨௪)

---

† இரண்டைஸ்வர்யம் = மோக்ஷைஸ்வர்யம், போகைஸ்வர்யம்.

அயனரி யரன்றிசை யமரர் யாருமுன்
வியன்கொண் மாண் பறிந்திடார் விளம்பி டத்தெனிற்
பயன்கொளுன் மகிமையைப் பாரிற் பண்பிலா
மயன்மிகு மாநுடன் மனமெங் கோர்வதோ. (உரு)

ஏவரு மறிவதற் கெளிதின் முக்குண
மேவரு முருவமாய் விளங்கு கின்றனை
தேவரு மறிவது சிறிதும் பெற்றிடாத்
தூவரு நிர்க்குணச் சோதி யாயுளாய். (உசு)

உன்னைநிர்க் குணமென யுன்னுவோர்க் கவண்
மன்னுவை சகுணையாய் மகிழ்ச குணைநீ
யென்னவெண் கொள்புவர்க் கெழினிர்க் குணையெனத்
துன்னுவை யாதலுன் சொருப மறிவர்யார். (உஎ)

புத்தியின் மந்தனென் புறமுன் னருளுற
லெத்தகை யீதினு லெவனுன் பாலரும்
பத்திவைத் தானவன் பால னுக்ரக
மெத்தகைப் பாயென விளங்கு கின்றதால். (உஅ)

மூத்தொழி லியற்றுமும் மூர்த்தி தாமுறு
மத்தொழி லாற்பெறு மானந் தத்திலர்
நத்துதுண் டாகவுன் னளின மார்பத
மெத்தரு ணமுந்துதி யியற்று கின்றனர். (உகு)

தேவிநீ யிலக்குமித் தேவி யாயரி
மாவிருப் புறவவன் மகிழ்து ணைவியென்
றேவிருப் பதுவுமெய் யெனினுன் பதவிணை
யாவியென் றடைக்கல மாமெண் கொள்வனே. (௩0)

அங்கன மடைக்கல மடைந்த வன்றனைத்
தங்குமன் மதற்குளாய்த் தாழ்ந்து ளானெனத்
துங்கவுன் றிருவுளந் தோன்ற வாழி சேர்
செங்கரத் தவனையுந் திரஸ்க ரிப்பையா. (௩க)

அத்தகை யாலவ னுலுன் றன்னையாள்
சத்திநீ யிலையவன் றன்னை யாளுதலு
முத்தம சத்திமா னுடைய மூர்புநீ
நத்துறு கட்டிலா நயம்பு யக்குமால். (௩உ)

குணமறு மொருவனைக் கூற வன்னினர்
புணர்தலி லாதுபோற் பொருந்த மாலினை
மணமுற னீவிடின் மருவுன் சத்தியா
யுணர்தரு நிக்ரகா னுக்ரக மும்மறும். (ருரு)

புருடர்கள் யாவுமுன் புகழ்சி ருட்டியில்
வருபவ ராலுனை வணங்கு கின்றன
ரருண்மிகு மரிவைய ராரு நீகொளு
முருவத னுல்வணங் குறன்மற் றில்லையால். (ருச)

உன்னைப்பெண் ணெனமதிப் புறுமி டத்திலா
னென்னநின் றிடுவையா னெனுமி டம்பெணாய்
மன்னுவை யாதலான் மாதி ரண்டினி
லின்னதென் றுனையள விடலென் மட்டிலை. (ருரு)

சகுணைநிர்க் குணையெனுஞ் சாற்றற் கில்லையுன்
மிகுகுண மறிந்திடா வீண னாயினும்
தகுமுனை வணங்குவன் சடம்விட் டென்னுயி
ருகுதரு ணத்தரு ளுனது பத்தியை. (ருசு)

என்றருந் துதிபல வியற்றித் தாள் பணிந்
தன்றுறு மரசனுக் ககம கிழ்ந்துமை
தன்றிரு வுருவுடன் றயங்க வற்புத
மொன்றுசா யுச்சிய முதவி னாளரோ. (ருஎ)

பனிரெண்டா மத்தியாயம் முற்றிற்று.
(ஆக செய்யுள் சஅக).

உ
ஸ்ரீமேஸ்வரா மனோஹராயை நம:
பதின்மூன்று மத்தியாயம்.
சுத்தியும்ன பாக்கியாயம்.

சொல்லுவன் சூதன் றெருன்முனி வரர்காள் சுத்யும்ந மன்னனுஞ்சுவர்க்கத்
தெல்லைகண் டதற்பி னெழிற்றணங் காவ லிசையற மெவற்றினுஞ் சிறந்த
வல்லவன் புரூர வன்றன தாசை மனுமுறை நீதியில் வழுவா,
தல்லறங் குடிகட் கணுகுறு தபடி யாண்டுவந் தனன்புகழ் மிகவே. (க)

கலாநிதி சந்தா விபரம்.

ஸ்ரீ

உள் நாட்டிற்கு வருஷ சந்தா	....	ரூ 2—0—0.
,, சாஸ்வத சந்தா	....	ரூ 25—0—0.
வெளி நாட்டிற்கு வருஷ சந்தா	....	ரூ 3—0—0.
,, சாஸ்வத சந்தா	....	ரூ 30—0—0.
தனிப்பிரதி 1-க்கு	....	ரூ 0—4—0.

சந்தாதாரர்கள் கவனிக்கவேண்டிய விஷயம்.

சந்தாத்தொகையை முன்னடி செலுத்தியாவது அல்லது **V. P.** யில் பணங்கட்டியாவது பத்திரிகை பெற்றுக்கொள்ள வேண்டும். எப்பொழுது சேர்ந்தாலும் அவ்வருடம் சித்திரை மாதம் முதல்தான் கணக்கு வைக்கப்பட்டு சித்திரை-மீ சஞ்சிகை முதல் அனுப்பப்படும்.

வியாசங்கள் எழுதுவோர் தெளிவாகவும், மததூஷணை, துரைத்தன விரோதம் முதலியவைகளில்லாமலும் எழுதவேண்டும். வியாசங்களைக் கூட்டவுங் குறைக்கவும் ஆசிரியருக்குப் பாத்தியமுண்டு. பிரசுரிக்கப்படாத வியாசங்கள் திருப்பியனுப்பப்படமாட்டா. வேண்டுவோர் தபாற்செலவை யனுப்பிப் பெற்றுக்கொள்ளவேண்டும். வியாசக்காரர் அபிப்பிராயங்கட்கு நாம் பொறுப்பாளியாகோம்.

கடிதம் எழுதுவோர் நம்பரைக்குறித்துத் தெளிவான நடையில் எழுதவேண்டும்.

மானேஜர்,
"கலாநிதி ஆபீஸ்,"
தேத்தாகுடி வடக்குச்சேத்தி P. O.,
Via வேதாரணியம்.

Printed by Chinthamani Ammal at the "Edward Press," Tiruvarur
and published by R. Vaithiyanatha Sarma, Thethakudi Vadakkuchethi Post,
Via Vedaranyam.